# தொண்டன்

கிறித்தவ இலக்கியத் திங்களேடு


## சத்தியமே! ஏன் உறக்கம்?

சத்தியமே! நீயேனே உறக்கம் கொண்டாய்!
சதிச் செயல்கள் நிதமேனே பிறக்கக்கண்டாய்!
முத்தென்று முழுஉப்பை விற்கக் கண்டாய்!
மூர்க்க ரெல்லாம் முதலாளி ஆகக் கண்டாய்!
சத்தியத்தைத் துணைக் கொண்டோர் சரியக் கண்டாய்!
சண்டாளர் புகழ் மண்ணில் விரியக்கண்டாய்!

பேசும் பொய்யாளரெலாம் பெருகக் கண்டாய்!
பெரும் பொய்கள் மெய்யாகும் திறத்தைக்கண்டாய்!
நேசமது நிதத்திடையே மறையக் கண்டாய்!
நெடுந்துயரம் நிலமெங்கும் நிறையக் கண்டாய்!
பாசங்கள் படுகுழியில் போகக் கண்டாய்!
பாரெங்கும் படுகொலைகள் மலியக்கண்டாய்!

கலைகளிலே களை மண்டிப் பெருகக் கண்டாய்!
கலைஞரெலாம் கண்ணீரில் உருகக்கண்டாய்!
முலையீன்ற தாயைமகன் மோதக் கண்டாய்!
முழுத்திருடர் நீதிபதியாகக் கண்டாய்!
விலைபோகாச் சத்தியமே! வீரங்கொண்டு
வீழ்த்தாது இவைகளையேன் உறக்கம் கொண்டாய்!

நிலாதமிழின்தாசன்


1987 மாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

மாசி — 1987
மலர்: 19 இதழ்: 01

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரு./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.
SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

உள்ளே...


1. இதயத்திலிருந்து ... 1
2. குப்பி விளக்கும்... — 2
3. விவிலியம் இறைவ... — 3
4. கவிஆரம் ... 5
5. சொந்தம் எப்போதும் ... 7
6. இளைஞர் அரங்கம் ... 10
7. மதுவும் மனித வாழ்வும் — 13
8. செய்தி முரசு — 15
9. ஆண்களே பெண்களைப் — 16
10. எதிரொலி — 17
11. பூஜைக்குரிய மலர் — 19
12. சர்வதேச கத்தோலிக்க — 23
13. பிரதேச அபிவிருத்தி... — 25
14. குறுக்கெழுத்துப் போட்டி ... 27


## இம்முறை இல்லை

தவிர்க்கமுடியாத காரணங்களால் 'திருமறையைத் தெரிந்து கொள்வோம்' பகுதி இம்முறை இடம்பெறவில்லை என்பதை அறியத் தருகிறோம்.

— ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இம்மக்கள் உதட்டினுல் என்னைப் போற்றுகின்றனர் அவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலைவில் இருக்கின்றது."

மத். 15/8.



# இதயத்திலிருந்து...

இம்மாதம் நான்காம் திகதி இலங்கை நாட்டின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

ஆயுதம் ஏந்தாமலே சுதந்திரம் அடைந்த இலங்கை நாட்டில் இன்று ஓரினம் சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடுகிறது எனில் நாம் அடைந்தது சுதந்திரம்தானு என்று சிந்திக்கத் தோன்றுகிறது.


கடந்த 39 ஆண்டுகளாகச் சுதந்திர நாட்டில் ஓரினம் மொழி, இன அடிப்படையில் உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, மூன்ருந்தர பிரஜைகளாக நடாத்தபடுகின்றபோது இந்தச் சுதந்திரத்தைப் பற்றி நாம் பெருமைப்படலாமா?

சுதந்திரவிழா கொண்டாடப்படும் அதே நேரம் இந்த நாட்டின் ஒரு பகுதியில் மக்கள் அச்சத்தோடும், அழுகையோடும், வாழுகின்றனர். உயிர்கள், உடமைகள் அழிக்கப்படுகின்றன, சித்திரவதைகள் செய்யப்படுகின்றனர். இந்நிலையில் நாம் சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று கூற வெட்கப்படவேண்டும்.

சுதந்திரம் என்பது ஓரினத்துக்கு, பெரும்பான்மைக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது அனைத்து மக்களினதும் பிறப்புரிமை. அதை அனைவரும் ஏற்று மதித்து நடக்கும்வரை உண்மையான சுதந்திரம் நிலவ முடியாது. அதன் பயனை எவருமே முழுமையாக, நிரந்தரமாக அனுபவிக்கவும் முடியாது.

சி. பி. இராஜேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# குப்பி விளக்கும் - குவலய விளக்கும்

ஒரு சிறிய குடில். அக்குடிலின் மத்தியிலே ஒரு குப்பி விளக்கு. அசைந்தாடி அழகு காட்டிக் கொண்டிருந்த விளக்கின் தீச்சுடர் குடிசையின் இருளை அகற்றிக்கொண்டிருந்தது. அங்கு வீசிக்கொண்டிருந்த மெல்லிய காற்று பேசியது.

"விளக்கே! உன் சுடர் எவ்வளவு அழகாக இருக்கிறது. அழகோடு ஒளி கொடுத்துப் பயனும் தருகிறுயே!" என்று பாராட்டியது. விளக்குக்குப் பெருமை தாங்கவில்லை. "என்னை என்னவென்று நினைத்துக்கொண்டீர்? இரவுச் சூரியனல்லவா நான்" என்று பெருமையோடு பேசியது.

"என்ன இரவுச் சூரியனு? இது என்ன புதுப் பெயராக இருக்கிறதே?" காற்று வியப்போடு கேட்டது.


"ஆமாம் இரவுச் சூரியன்தான். உலகுக்கு ஒளி கொடுப்பது சூரியன் அது பகலில். இரவில் ஒளி கொடுப்பது நான். அப்படியென்றல் இரவுக்குச் சூரியன் நான்தானே!" விளக்கின் பதிலில் தலைவீக்கம் தெரிந்தது.

காற்று நகைத்துக்கொண்டே கூறியது. விளக்கே! உலகம் முழுவதும் ஒளி பரப்பும் சூரியன் எங்கே? குடிலுக்குள் முடங்கிக் கிடக்கும் நீ எங்கே? உனக்கு ஏனப்பா இவ்வளவு பெரிய ஆசை? இரவு முழுவதும் எரிந்தாலும் நீ என்றும் குப்பி விளக்குத்தான். நீ குவலயத்தில் சூரியனுக முடியாது.

குப்பி விளக்குக்கு வந்ததே கோபம். படபடவென்று பொழிந்தது. முட்டாளே! என் பெருமை ஊர் சுற்றித்திரியும் உனக்கென்ன தெரியும். உதவாக்கரை நீ. பொருமையால் உளறுதே என்று திட்டித் தீர்த்தது. காற்றுக்கு மட்டும் கோபம் வராதா என்ன? பொங்கியது காற்று. அவ்வளவுதான் குப்பி விளக்கு அணைந்தது. குடிசையை இருள் சூழ்ந்தது. விளக்கிலிருந்து வந்த புகையின் நாற்றம் குடிலை நிறைத்தது.

— எம். வீ.

## வாயாடி வண்டுமணி



கொக்கட்டிச்சோலை சம்பவத்தில் அப்பாவி மக்கள் எவருமே கொல்லப்படவில்லை

— இலங்கை வெகுஜனத் தொடர்பு சாதனம்

ஆஹா எவ்வளவு பெரிய உண்மை! இதச்சொன்ன ஆளுக்கு 'நவீன அரிச்சந்திரன்' அப்படீன்னு பட்டம் கொடுக்கணுங்க... ஹூம். போதாதுங்க. இந்தச் சாதனைக்காக 'கின்னஸ்' புத்தகத்திலேயும் பெயரைப் போடணுங்க. ...ஹி...ஹி... இதெல்லாம் போதுங்களா இந்த மாபெரும் உண்மையைக் கண்ட மாமேதைக்கு "நோபல்" பரிசே கொடுக்கலாம் போங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியம் — இறைவனதும் மனிதனதும் சந்திப்பு

* றெக்ஸ் ஜோசப்

இறைவன் பற்பல வேளைகளில் பற்பல சூழ்நிலைகளில் பற்பல விதமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார். அதேபோலவே யூதர்களுக்கும் தம்மை அறிவித்தார், அறிமுகப்படுத்தினார். வார்த்தைகளாலும், செயல்களாலும் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வெளிபாடுகளுக்கெல்லாம் யூதச் சமூகம் தன் பணிவுள்ள பதிலை - விசுவாசத்தை அளிக்கத் தவறியதில்லை. இவ்வெளிப்பாடும்-விசுவாசமும் ஒருங்கிணைந்த சங்கமத்தையே விவிலியத்தில் நாம் ஆதிமுதல் அந்தம் வரை காண்கிறோம். இதனாற்றான் திருமறைநூல் இறைவனும் மனிதனும் எதிர்கொள்ளும் சந்திப்பு என வர்ணிக்கப்படுகின்றது. இச்சந்திப்பின் எதிரொலிகளை நமக்குத் திருவெளிப்பாடாக, அறிவிற்குப் படிப்பினையாக, வாழ்க்கைக்கு ஒளியாகவும், முக்திக்கு வழியாகவும் அமைகிறது.

இந்தத் திருவெளிபாடு இறைவனின் ஏவுதலினால் காலத்திற்குக் காலம் மனிதர்களால் எழுத்தில் பொறிக்கப்பட்டது. இதனால் விவிலியத் திருநூலுக்கு இறையாசிரியர் - மனித ஆசிரியர் என இரு ஆசிரிய கர்த்தாக்கள் உண்டு. இத்தெய்வீக - மனிதத் தாக்கம் வேதாகமம் முழுவதும் நூலிழை என ஓடுகிறது. குறுக்கும் நெடுக்குமாக ஓடும் நூலிழைகளினால் உருவாகும் அழகிய வண்ண ஆடை போன்று விவிலியத் திருநூல் இறைவனாலும் மனிதனாலும் இணைந்து சமைக்கப்பட்ட மாபெரும் இரட்சணியக் காவியமாகும்; மனிதப் புலவனும் இறை இசையமைப்பாளனும் இணைந்து புனைந்த ஒப்புயர்வற்ற அன்பின் கீதம் ஆகும்.

இன்றைய நவீன யுகத்தில் வேதாகமத்தில் சில விஞ்ஞான வரலாற்றுப் பிழைகள் இருப்பதை அறிந்து சிலர் (கிறிஸ்தவர்கள் உட்பட) வேதாகமத்தையிட்டு இடறலும் அவிசுவாசமும் அடைகின்றனர்; புராணமென்றும், புராதனம் என்றும் விவிலியத்தை ஒதுக்கிவிடுகின்றனர். இது பெரும் தவறு. அறிவுடைமைக்கு இழுக்கு. நன்மையின். உண்மையின் ஊற்றான இறைவனிடமிருந்து பொய்யும், பிழையும் பிறக்கமுடியாது. வேதாகமத்தை எழுதிய, தொகுத்த மனித ஆசிரியர்கள் எவ்வளவு அறிவாளிகளாயினும் சரி — புனிதர்களாயினும் சரி குறையுள்ளவர்களே. இத்தகைய குறையுள்ள மனித ஆசிரியனை இறைவன் தன்னுடன் கூட்டுச் சேர்த்துக்கொண்டார். மனிதனின் இயல்பை மாற்றியமைத்து அவன் இயல்பை இறைவன் உருவிழக்கச் செய்து அவனைச் செயற்கையாக்கிவிடவில்லை இறைவன். குறைவுக்குள்ளேயே நிறைவைக்காணும் புதுமையை இறைவன் இங்கு செய்வது மட்டுமன்றி - குறையுள்ள மனித இயல்பு உண்மையானது, இயல்பானது, புனிதமானது, அழகானது என்பதையும் எண்பிக்கின்றார்.

எனவே விவிலிய வேதாகமத்தில் உள்ள சில தவறான விளக்கங்களும் தரவுகளும், அதன் மாண்பிலிருந்து எள்ளளவும் குறைந்து விடுவதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏனெனில் வேதாகமம் வாழ்க்கைக்கு விளக்கேயன்றி விஞ்ஞானப் பாடநூலோ அன்றேல் இதர சாஸ்திரங்களின் கையேடும் அல்ல விவிலிய வேதாகமத்தில் காணப்படும் விஞ்ஞான, பெளதீக, புவியியல் விளக்கங்கள் யாவும் பரிசோதனை முறைப்படி நிரூபிக்கப்படக்கூடிய தரவுகளுக்கு முற்பட்ட காலத்து மனிதனின் கணிப்பு. அதாவது விஞ்ஞான யுகத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த; நுணுக்கமான கருவிகளின் துணையின்றி புலன்களாலும், புத்தியினாலும் மட்டுமே பூமியைப் புரிந்துகொண்ட; விஞ்ஞான எல்லைகளுக்கு வெளியே நிற்கும் மனிதனின் கணிப்பு என்பதனை உணர்ந்து கொண்டால் விவிலியத்தைப் பற்றிய தவறான அவசரக் கணிப்புகள் எல்லாம் மறைந்து அதனை உண்மையான இயல்பில் நோக்க ஏதுவாகும்.

எனவே இதை மனிதன் பின்னணியில் வைத்துக் கொண்டு, அவை எழுதப்பட்டதன் நோக்கத்தை முன்னணியில் வைத்து அவற்றை ஆராய்ந்து பார்த்தால், அப்பிழைகளிலும் கூட ஒளிரும் மகோன்னதமான உண்மைகளைக் காணலாம். சாஸ்திர சம்பந்தமான தரவுகளிற் சில பிழைகள் இருப்பதனால் விவிலியமே பொய் என அதை ஒதுக்கிவிடுபவன் கழுவிய நீரோடு சிசுவையும் சேர்த்து ஒதுக்கிவிடும் பரிதாபத்துக்குரிய முட்டாள் போன்றவன்.

கரடுமுரடாய், பார்வைக்கு அசிங்கமாயுள்ள சிப்பியை எறிந்துவிடாமல் உடைத்துப் பார்த்தால் அதனுள் விலையேறப்பெற்ற முத்தைக் காணலாம். அழுக்கு நிறைந்த உலோகத்தைச் சுட்டுப் புடம் போட்டால் பசும்பொன்னைக் காணலாம். அதேபோலவே வேதாகமத்தில், உலக சாஸ்திரங்கள் பிழையெனக் கூறும் தரவுகளைக்கூட, அவை எழுதப்பட்டதன் நோக்கங்களை (அதாவது மனித மீட்பு, தெய்வ பராமரிப்பு, இறை அன்பு என) பொருள் பொதிந்த உண்மைகளை அவற்றிற் காணலாம்.

திருமறை நூலில் விஞ்ஞானமுண்டு, இலக்கியம் உண்டு. மற்றய சாஸ்திரங்களும் உண்டு. ஆனால் விஞ்ஞானங்களை எண்பிக்கவோ அல்லது இலக்கியச் சுவைகளை அள்ளிக் கொடுக்கவோ அல்லது சாஸ்திரங்களை நிரூபிக்கவோ வேதநூல் எழுதப்படவில்லை. வியத்தகு இயற்கையைப் படைத்த இறைவனின் மாண்பை எடுத்தியம்ப விஞ்ஞானம் பயன்படுத்தப்படுகின்றது. மனமுருகும் பக்தி நிலையையும் இறைவன் மேற்கொண்ட அன்பையும் ஆனந்தத்தையும் வெளிப்படுத்த இலக்கியம் துணைபுரிகின்றது.

ஆகமொத்தமாக விஞ்ஞானமும் இலக்கியங்களும் சாஸ்திரங்களும், விவிலியமும் தனக்கு வேண்டிய அளவில் உபயோகிக்கும் கருவிகளேயன்றி வேறல்ல. விஞ்ஞானங்களினதும் சாஸ்திரங்களினதும் எல்லைகளைப் புரிந்துகொண்ட எண்ணற்ற அறிவாளர்கள், வேதாகமத்தில் இலைமறைகாய் போலத் தோன்றியும் தோன்றாமலும் நிற்கும் ஆழ்ந்த உண்மைகளை ஏற்றுக்கொண்டு விவிலியம் ஒரு தெய்வீக நூல் என ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே இறையூக்கம் பெற்ற மனிதர்களால் எழுதப்பெற்ற விவிலிய வேதாகமத்தில் தவறில்லை. என்னும் திருச்சபையின் கூற்று முற்றிலும் உண்மையானதே. மனுக்குலத்திற்கு ஈடேற்றத்தின் வழியைக் காட்டுவதில் அவனது ஆன்மாவுக்கு அமைதியை அளிப்பதில், அவனை முழுமைப்படுத்துவதில் இறைவனையும் அவரது அன்புள்ள பராமரிப்பை வெளிப்படுத்துவதில்; வேதாகமம் எந்தப் பிழையும் விடவில்லை எனத் துணிந்து கூறலாம்.

## ஒரு முறைதான்

நீ ஒருமுறைதான் ஒரு இடத்தை கண்டு களிக்கக் கூடிய வாய்ப்பைப் பெறுவாய் என்றால், எவ்வளவு கவனமாகவும், உற்சாகமாகவும் அவ்விடத்தைக் கண்டு களிப்பாயோ, அதுபோலவே மனிதர்களோடு பழகும் போது கவனத்தோடும் உற்சாகத்தோடும் பழகு. காரணம். மனிதர்கள் — அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு தனி அழகோடு தோன்றுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கவி ஆரம்

# நமக்கேது விடிகாலை...

பேசிப் பேசித்தான் நாளெல்லாம் கரைந்தனகாண்
பேசவினிப் பேச்சில்லை என்றநிலை வந்தபின்னும்
பாசிமலை மேலேறும் நிலைமைதான் இங்குளதே !
பரிசுத்த இதயமுடன் எம்நிலையை யாருணர்வார் ?
ஊசிக் காதினூடே ஒட்டகத்தைப் புகுத்தவைக்கும்
உரையாடல் வெறும்பேச்சு சத்தியமாய் இனிவேண்டாம் !
காசினியில் எம்நிலைமை தாயில்லாக் குழந்தைநிலை
காப்பாற்ற யாருமில்லை செவிலித்தாய் கூடயில்லை !

வேலியே பயிரையிங்கு மேய்கின்ற நிலைமைகண்டு
வேதனைப்படுவது யார் ? வேஷங்கள் போட்டதுயார் ?
காலிமனை சொந்தமெனக் காசுவைத்து வழக்குரைக்கும்
கனவான்கள் முன்னாலே ஆண்டிநாம் என்செய்வோம் ?
கூலிபல கொடுத்தின்னும் எமக்கேனோ விடிவில்லை !
காலனும் எமக்கெதிரி யானானே இம்மண்ணில் !
நீலிக் கண்ணீர்தான் வடிக்கின்ற பலபேர்கள்
நிலைத்திருக்க மட்டுமிங்கு எமக்கேது விடிகாலை...?

கண்ணீரும் வற்றியிங்கு பாலையாய்ப் போனதாலே
கஷ்டத்தைக் கண்டெமக்கு அழுவதற்குங் கண்ணீரில்லை !
மண்ணிலே கண்மூடி நிம்மதியாய்த் தூங்கியதும்
மகிழ்வான இடங்கண்டு மாலைவரை உலவியதும்
விண்ணிலே சதிராடும் மேகம்போல் ஆனதையோ ?
விளையாட்டு பூனைக்கோ சுண்டெலிக்கு உயிர்போகும்
வண்ணமாய் ஆனகதை வையத்தில் வாழ்வெமக்கு
வழிகாட்ட யாருமின்றி வாழுகிறோம் மாழுகிறோம் !

சிவா. பத்மநாதன்
கூளாவடி - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விண்ணேறிப் பறப்பதேனோ



— என். கே. தயாளகுணசீலன் —

விண்ணேறிப் பறக்குதடா விந்தைக் கூட்டம் !
விஷயமென்ன புரிகிறதா ? விண்டு பார்த்தால்
கண்முன்னே சாவுவந்து கதிகலக்கும் !
காலவெள்ளம் திசைமாறி திகிலெழுப்பும்
மண்மூடி மறைவதற்குள் மனித ரெத்தம்
மந்தைகள்போல் சந்தியிலே விரவியோடும் !
என்ற பெருந் தொல்லையினால் தானோ யாரும்
இங்கிருக்க மாட்டாமல் ஏகின்றாரோ ?

பச்சைக் குழந்தைகளே பள்ளி சென்று
பரிச்சயமாய் விளையாடி மகிழ்ந்த காலம்
இச்சைக் கிசைந்தபடி எங்கும் சென்று
எழில் கொஞ்சும் கோயில் குளம் தீர்த்தமாடி
அச்சமிலா வுணர்வுமிக விருந்த காலம்
அழைத்தாலும் இனிவருமா சந்தேகந்தான்,
மிச்சமினி உயிர்மட்டும் என்றுதானோ,
மேல்நாடு போவதுவும் நியாயம் போலும்

வாழ்க்கைச் செலவேறி வரவு குன்றி,
வருவதெல்லாம் துயரமென்ற நிலைக்கு மாறி,
சாக்கடைக்குப் போகாத குறை நிரப்ப
தான் பறந்து விமானத்தில் போகின்றாரோ ?
தேக்கிவைத்த வேதனைகள் சுரக்கும் போதும்
தேற்றங்கள் வருவதுண்டு அதனால்தானோ
மார்க்கமினி வெளிநாடு போவதென்று
மண்ணைவிட்டு விண்ணேறிப் போகின்றாரோ ?

எத்தனையோ இடர்பிடிகள், ஏற்றத்தாழ்வு,
இருந்திடினும் அவை நடக்கும் சம்பவந்தான்
அத்தனையும் தாண்டி உயிர் தப்பினாலும்
அணிப்பிசக முடியாத அவதியொன்று !
பெற்றதிரு மனைவி பிள்ளை குடும்பமென்று
பெருமையுடன் நடப்பதெங்கே ? வாழ்க்கையென்ற
கட்டுக்குள் சிக்கியதால் கவலைமெத்தி,
கரைசேர முடியாத காரணந்தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அத்தியாயம் - 13

''ஆற்றினிலோடும் மீனுவாள்
அணைப்பினில் உறங்கும் துணையாவாள்
ஊற்றினில் சுரந்த குளிராவாள்
உணர்வினைத் தூண்டும் பொழிலாவாள்''

—சோமலிங்கம்--

சித்திராவும், பிசறிஸ் கந்தோரில் வேலைபார்க்கும் குமாரும் தனியாகநின்று பேசியதை ரெண்டுமூன்று தடவைகள் தான் பார்த்ததாக மாணிக்கம் சொன்ன செய்தி ஆனந்தனின் காதுகளுக்கூடாக துப்பாக்கி வேட்டுப் போல் பய்ந்தது. கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அவன் மாணிக்கத்தின் முன்னுல் அப்படியே அசையாது நின்று விட்டு, பெருமூச்செறிந்தான்.

''சரிமாணிக்கண்ண இந்த விசயம் உங்களுக்கும் எனக்கும் தெரிந்ததாக இருக்கட்டும். நீங்க பொயித்து வாங்க!'' மாணிக்கம் போய் விட்டான்.

ஆனந்தனுக்கு தலை சுற்றி வந்தது. பேசாமல் போய் கதிரையில் இருந்து கொண்டான்.

மற்றப் பிள்ளைகளுக்கெல்லாம் சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்து விட்டு பாக்கியம் ஆனந்தனை வழமை போல தனியாகவே அழைத்தான்.

சாப்பாடு வேண்டாமென்று சொன்னுலும் அவள் கேட்காமல் புறுபுறு கறகறவென்று எதையாவது சொல்லித் தொல்லைப்படுத்துவாள் என்பதற்காக ஆனந்தன் கை கால் முகங்களை அலம்பிக் கொண்டு குசினிக்குள் நடந்தான்.

பீங்கானில் சோற்றைப் படைத்து பாரைமீன் குழம்புக் கறியை ஊற்றும் போது பாக்கியம் ஆனந்தனின் முகத்தைப் பார்த்தாள். வழமையான கலகலப்பை அங்கே காணமுடியவில்லை. சாப்பாட்டில் கூட பிரியமில்லாதவனைப் போல சோற்றை ஏனோ தானோவன்று பிசைந்தபடியே இருந்தான்.

''என்ன ஆனந்தா இண்டைக்கெண்டு ஒருமாதிரியா இருக்கிறு என்னடா நடந்த உனக்கு!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''ஒண்டுமில்ல, ஆணத்த ஊத்துங்கவன்!''

''என்னடா இது குழம்புக் கறி வெச்சமாதிரியே இருக்கு அதுக்குள்ள ஆணத்த ஊத்தச் சொல்லுறா! இவனுக்கு இன்டைக்கு என்னவோ நடந்து பொயித்து! ஏன்டா கணக்கு வழக்கில ஏதும் பிழையா!''

''பிழைதான் நடந்து போச்சி! ஆனா கணக்கில இல்ல!''

''வேறெதில!''

''நீங்களும் நானும் போட்ட கணக்கில தான் பிழ நடந்து போச்சி!''

''என்னடா சொல்லுறா!''

''அம்மா நான் சொன்னா நீங்க கோவிக்க மாட்டீர்களே! கொம்பிக் கூத்தாட மாட்டீர்களே!''

''உனக்கென்ன பைத்தியமா! நான் முந்தியப்போல இப்பெல்லாம அப்படிச் செய்யிறத நீ கண்டிருக்கிறியா எல்லாம் அப்பு செத்ததோட செத்துப்போச்சி!''

''அம்மா, சித்திராவுக்கு ஒரு கலியாணத்த கில்யாணத்தக் கட்டி வைக்கிறல்லையா!''

''ஏன் நீ வீரகத்திட மருமகனாகப் போகப் போறயா!''

''அம்மா எனக்கு விசரக் கிழப்பாதீங்க! நான் கேட்டதுக்கு பதிலச் 'சொல்லுங்கவன்!'

''அவளுக்கு இப்ப என்னடா வயசா பொயித்து! இன்னும் ரெண்டொரு வயசு போட்டுமே!''

'அதுக்கு முதல் அவள் பொயித்திருவாள் போலயிருக்கு!''

''நீ என்னடா சொல்லுறா;''

ஆனந்தன் மாணிக்கம் சொன்னதையெல்லாம் தாயிடம் ஒப்புவித்தான்.

அதைக் கேட்டதும் பாக்கியம் வீலிட்டுக் கத்தாத குறையாகத் 'திணுக்கெறிந்தாள்.

''அம்மா, தயவுசெய்து இந்தச் சாதியப் பத்திக் கதைக்காதீங்க!'' சாதிவித்தியாசம் பாத்துப்பாத்து நம்மட தமிழ்ச்சாதி நாசமாய் போனதப்போல நம்ம குடும்பமும் சீரழிஞ்சி போகும்!'' அவன் சித்திராவ ஒழுங்கா வாழ வெச்சா அதுவே போதும் அவன் தான் உயர்ந்தசாதி! நீங்க அதையெல்லாம் யோசிச்சி மூளையக் குழப்பாம ஆணத்த ஊத்துங்க!

சரியாக ஆனந்தனின் பேச்சும்! முகபாவமும் அவன் கணவன் செல்லையாவையே அவளுக்கு நினைவூட்டியது;

## ★ தொடர்கதை ★

அவள் நிலையை அறிந்த ஆனந்தன், தாயைச் சாந்தப்படுத்தி சில விடயங்களை விளங்கப்படுத்தினான்.

''அம்மா! குமார் நல்ல பையன்! நான் சொன்னால் அவன் கேட்டுக்கொள்வான். தயவு செய்து இந்த விசயத்தை ஒருவருக்கும் சொல்லிப் போடாதீங்க ஆறுதலாக அவன நான் கண்டுபேசி ஒரு நல்ல முடிவெடுக்கிறன்!''

''அடே அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்திராத அந்தப் பொடியன் என்ன சாதியோ! என்ன குலமோ என்ன கோத்திரமோ!''

அவனுடைய பேச்சையும் எண்ணங்களையும் எண்ணி மனதிற்குள்ளேயேமகிழ்ந்தபடி ஆணத்தை ஊற்றிவிட்டு எழுந்தாள். அவள் எழும்பும் போது பெரிதாக ஏதாவது பெரு மூச்சு விடுவாள் என்று ஆனந்தன் எதிர்பார்த்தான். ஆனால் அப்படி அவள் செய்யாதது அவனுக்கு ஓரளவு நிம்மதியை அளித்தது.

சாப்பிட்டு முடிந்து, பீங்கானை வைத்து விட்டு மீன் வாடிப்பக்கம் மெதுவாக நடந்தான். அங்கே ராமு ஏதோ புத்தகமொன்றைப் பார்த்தபடி பெட்டிகளின்மேல் படுத்துக் கிடப்பது தெரிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தது. ஆனந்தன் வாடிக்குள் காலடி எடுத்து வைத்ததும் ராமு துள்ளியெழுந்து நின்று கொண்டான்.

"நீ இரு. நான் சும்மா வந்தனுன்!" என்று சொல்லியபடியே பக்கத்தில் கிடந்த பெட்டியொன்றின் மேல் ஆனந்தன் குந்திக் கொண்டான். ஒரு சில நிமிட மௌனத்தின்பின் ஆனந்தன் ராமுவைப் பார்த்துக் கேட்டான்!

"எப்பசோதனை?"

"ஓகஸ்ற் மூணும்தேதி தொடங்குது! மெய்தான் அண்ண போனமாதம் ரியூசன் காசி நான் கட்டல்ல!"

"என்ன அப்ப நான் ரியூசனுக்குத் தந்த காசி?"

"அத என்னேட படிக்கிற ஒரு பொடியனுக்காகக் குடுத்துப் போட்டன்! பாவமண்ண நல்ல கெட்டிக்காரப் பையன் ரெண்டு மூணு மாசமா காசி கட்டல்லெண்டு ரியூசன் மாஸ்டர் அவன விலக்கப் போறனெண்டு நிண்டார். நான் தான் அவனுக்காக..."

"அப்பஇத நீயேன் சொல்லல!"

"நீ ஏசுவாண்டுதான் சொல்லல!"

"அம்மாட்டயாவது சொல்லியிருக்கலாம் தானே!"

'பிறகு சொல்லலாமெண்டு...'

"சரிசரி பிறகு நான் சொன்னதாக அம்மாட்டக் கேட்டு வாங்கிக்கொள்! தம்பி ராமு, இல்லாதவங்களுக்கு இருக்கிறவங்க கொடுத்து உதவி செய்யத்தான் வேணும்: அதுக்கு நான் தடையில்ல. ஆனு உன் பணத்தையும் நீ கட்டியிருக்க வேணும்! தனக்குக் கண்டுதான் தானம் வழங்கவேணும் என்பதையும் மறக்கப்போடாது! என்னவோ நீ படிச்சி முன்னுக்கு வந்தாத்தான் தங்கச்சி ராணியை ஒரு வழிப் படுத்தலாம்! இந்தத் தொழில் இப்படியே தொடர்பாக லாபம் தருமெண்டுறத நம்பேலாத காலமாக்கிடக்கு! காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேணும் என்ற ஒரு நோக்கத்தை வச்சிக்கொண்டு நானும் எவ்வளவோ மனக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருக்கன்! எல்லாம் ஆண்டவன் செயல் சரிசரி நான்வாறன் நீ படி!" ஆனந்தன் அங்கிருந்து வெளியேறி நடந்தான்.

"ஒரு நாளுமில்லாது அண்ணன் இன்றைக்கு ஏன் இப்படி வந்து சொன்னுன்! "வீட்டில் ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டதோ!" என்று ராமு எண்ணியபடியே மீண்டும் பெட்டியில் சாய்ந்து கொண்டான்.

ஆனந்தன் வாடியிலிருந்து ஒரு நூறுயார்த் தூரம் நடந்திருக்க மாட்டான். சின்னவன் அவசர அவசரமாக வந்து ஒரு கசங்கிய கொப்பித் தாளை நீட்டினுன்.

"கும்பிடப்போன தெய்வம் குறுக்கால வந்ததைப் போல வாடாப்பா வா!" என்றபடி சின்னவன் கொடுத்த அந்தக்கடதாசியை விரித்தான். அதிலே முத்துமுத்தாக ஜெயந்தியின் கையெழுத்து இருந்தது.


—(தொடரும்)—

எல்லைக் கற்களைப் பார்க்கின்றோம், மழையிலும், வெயிலிலும் துன்பத்துக்கு உள்ளாகின்றன. சிலர் எல்லைக் கற்களாக வாழ வேண்டும், இல்லையென்றால் பலர் திசைமாறிச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் அரங்கம்



# மனித மதிப்பீடு

— ஒரு மனிதனின் மதிப்பு என்ன ?
— ஒரு மனிதனின் பெறுமானம் என்ன ?
— ஒரு மனிதனின் விலை என்ன !

என்று பொதுவாக வினா எழுப்பினால் எமக்கு கிடைக்கும் விடை 565 ரூபா 70 சதம் ஆகத்தான் இருக்கும். ஏனெனில் சராசரி 150 இறாத்தல் எடை உள்ள ஒரு மனிதனிலிருந்து அவ்வளவு பெறுமதியான பொருட்களைத்தான் பெறமுடியும் என்று இரசாயன வியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பெறுமானமுள்ள மனிதன் தான்,
— தனது வீட்டில் - தனது தொழிற்தளத்தில்
— தனது சமூகத்தில் - தனது பிரதேசத்தில்
— தனது நாட்டில் - ஏன் இந்த உலகில்

வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் — காலங்களில் இதைவிட உயர்ந்த மதிப்பீடு உள்ளவனாக — மதிப்பே இல்லாதவனாக மாற்றமடைகின்றான்.

— ஒருவனின் பண்புகளை (நடத்தைகளை)க் கொண்டு.
— ஒருவனின் கற்கை நெறிகளை (அறிவை)க் கொண்டு,
— ஒருவனின் தொழிற் சிறப்பை (வினைத்திறனை)க் கொண்டு,

மனிதன் அளவிடப்படும் — சூழல் இன்றெல்லாம் குறைந்து வருகின்றது.

இன்று, ஒருவனிடம் இருக்கும் பொருட் செல்வங்கள் (பணம், வாழ்க்கை வசதிகள்) மேலைத்தேய வாழ்க்கை முறை, நடத்தை முறைகளே மனித மதிப்பீட்டு அளவு கோல்களாக அமைந்துள்ளன.

குறிப்பாக எம் நாட்டில் இளைஞர்கள் (யுவதிகள் உட்பட) தமது வீட்டில், சமூகத்தில், அமைப்புக்களில் முக்கியத்துவம் பெறவேண்டுமெனில்,

அவன் - அவள், வெளிநாட்டில் வேலை செய்து நாடு திரும்பவேண்டும் — வரும்போது சில வருடங்களுக்கு வாழ்வதற்கு போதுமான பணம் - பொருட்கள் கொண்டுவர வேண்டும். மேலைத்தேய நாகரீக வாழ்க்கை முறையும்-பொருட் பாவனைகளும் அவனோடு-அவளோடு இணைந்திருக்க வேண்டும் எனும் சூழல் இன்று உருவாகி விட்டது. இவை இருந்தால் தான் சமூகம் அவனை - அவளை ஏற்கின்றது — ஆதரிக்கின்றது — பெருமையாகப் பேசுகின்றது.

கடின உழைப்பு இருக்கவேண்டும் தான்,
பொருளாதார உயர்வு அவசியம் தான்,
வாழ்க்கை வளமுள்ளதாக மாறவேண்டும் தான், ஆனால்,
மனித மதிப்பீடுகள் சிதைவுறக்கூடாது.

திறமைமிக்க மனித (இளமை) வளம் புறக்கணிக்கப்படக்கூடாது, என அன்புக்குரல் கொடுப்பது —

**— கலையுலகன்**

''நல்லதோர் வீணை செய்தே - அதை
நலன்கெட புழுதியில் எறிவதுண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொல் அருவி

# இதயங்களைத் திறவுங்கள்

★ மனம் எனும் கோயிலிலே
மங்காத தீபம் இட்டு
அன்பெனும் பண்பினையே
அயராது பாதுகாத்து
இதயம் எனும் வாசலையே
அன்பிற்காய் திறந்து வைத்து
கெட்டவற்றை வெளிப்புறத்தே
கெட்டியாய் தாளிட்டு
உறவு எனும் நற்பண்பினையே
உவப்புடன் ஏற்றிடுவோம்.

★ உள்ளமதில் மாற்றத்தையே
உணர்ச்சியுடன் செயற்படுத்தி
சிந்தனையின் ஒளிக்கீற்றை
சிறப்பாகச் செய்திடுவோம்
துன்பங்கள் தொடர்ந்தாலும்
துயரங்கள் வந்தாலும்
இதயம் எனும் சோலையிலே
இறைவனையே குடி வைப்போம்
ஆணவம் எனும் பழக்கத்தையே
அடியோடு அகற்றிடுவோம்.

★ உள்ளத்தில் அன்பைப் பெருக்கி
உலக ஒற்றுமையை வளர்த்திடுவோம்
நெஞ்சக் கறைகளை அகற்றி நாமும்
நேர்மையை வளர்த்திடுவோம்
அகிலத்திலுள்ள மாந்தர்களின்
அழுக்கையெல்லாம் கழுவிடவே
அன்பிற்கும் - உறவுக்கும் எங்கள்
இதயங்களை திறந்திடுவோம்
எல்லோரும் இனிதாய் வாழ்ந்திடவே
என்றும் நற்பணி புரிந்திடுவோம்.

— காஞ்சனா வைரமுத்து
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

# காலம் மாறும்

கீழ் வானத்து
சூரியக் குஞ்சு
இப்போதெல்லாம்
காலையில் சிவப்பது
ஐசாக் நியூற்றனின்
அரியத்தால்
அரியப்பட்ட
நிறமாலை பேதத்தால்
மட்டுமல்ல
முடிந்தால்
வானத்துத் தாரகையும் —
நாளை
சிவப்பாய்த்தான்
சிரிக்கும் போலிருக்கிறது
மேற்கே தோன்றும்
உதயங்கள்
இப்போதெல்லாம்
கிழக்கிற்குக் கிடைப்பதில்லை
ஆனாலும்,
சூரியன் கிழக்கில்
சிவப்பாய்த்தான்
உதிக்கிறது
முன்பெல்லாம்
தெற்கின் கைகள்
வடக்குக்கும்
கிழக்குக்கும்
வரவேற்புக்கூறி
நீண்டன.
இப்போதும்
நீட்டப்படுகின்றனதான் !
கைகளல்ல,
உலோகக் காப்புகளும்
கம்புகளும்
காலம் மாறுகிறது —
கரங்களும் மாறுகின்றன
நாளையும்
காலம் மாறத்தான்
போகிறது.

— மாகோ ஈஸ்வர புத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்

ரூபவாஹினி தொலைக்காட்சியில், 'நைற் றைடர்' (Knight Rider) படம் ஓடிக்கொண் டிருந்த . அதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சிங்களப் பெண்மணி, என்னிடம் திரும்பி, இப்படியான ஒரு கார் என்னிடம் இருந்தால் இலங்கையில், பயங்கரவாதமே இல்லாமல் செய்துவிடுவேன். என்று கூறினாள். அப் பொழுது நான் படித்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வந்தது — நீங்களும் படித்துச் சிந் தியுங்கள்...

ஒரு சமயம் மாவீரன் அலெக்சாந்தர், ஜூலியஸ் சீசர் மற்றும் நெப்போலியன் மூவ ரும் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் ராணுவ மரியாதை ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். ஊர்வலத்தைப் பார்த்து முடிந்ததும் அலெக்சாந்தர் 'என்னி டம் இம்மாதிரியான இராணுவ டாங்கிகள் இருந்திருந்தால் ஆசியாக் கண்டம் பூரா நான் வெற்றி கண்டிருப்பேன்' என்றாராம். ஏவுகணைகளைப் பார்த்து பிரமித்த சீசர் 'என்னிடம் இம்மாதிரியான ஏவுகணைகள் இருந் திருந்தால் உலகம் பூரா நான் ஆட்சி செய் திருப்பேன்' என்றார்

அச்சமயம் 'பிராவ்தா' பத்திரிகையின் பிரதி ஒன்றை பார்வையிட்டுக் கொண்டிருந்த நெப்போலியன் 'இப்படிப்பட்ட செய்தித்தாள் மட்டும் என் நாட்டில் இருந்திருக்குமேயானால் 'வாட்டர் லூ' சண்டையைப் பற்றிய விபரங் களை உலகமே அறிந்திருக்காமல் செய்திருப் பேன்' என்று கூறி முடித்தார்.

— எஸ். லோகநாதன் —

ஆதாரம் —
'Readers Digest' March 1981


## மனிதன் யார்?

மனிதன் இரசாயனச் சேர்க்கை - அறிவியல்
மனிதன் ஓர் வாக்கு - அரசியல்
மனிதன் கடவுளின் சாயல் - இறையியல்
மனிதன் பகுத்தறிவுள்ள விலங்கு - மெய்யியல்
மனிதன் ஒரு செலவாளி - பொருளியல்
மனிதன் ஒரு நோயாளி - மருத்துவயியல்
மனிதன் ஒரு எண் - கணிதவியல்

தகவல் — தொனி

உங்கள் ஆக்கங்களை எழுதுங்கள்
**இளைஞர் அரங்கம்**
திரி/மட். இளைஞர் ஆணைக்குழு
20, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

## அறிவித்தல்



திரி/மட். இளைஞர் ஆணைக்குழுவின் உதவியுடன், தலைமைத்துவ, மனித மைய உருவாக்கல் கருத்தரங்குகளை — பயிற்சி பாசறைகளை 1987ம் ஆண்டில் நடாத்த விரும்பும் இளைஞர் அமைப்புக்கள், பொதுத் தொண்டர் தாபனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், அரசினர் சார் பான மன்றங்கள், பாடசாலைகள், பங்குத் தள பக்திச் சபைகள் ஆகியன முன்கூட் டியே ஆணைக்குழு அலுவலகத்தில் அதற் கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்துகொள்ளும்படி பணிவன்பு டன் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. C. மெக்ஸி ஒக்கர்ஸ்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்.

திரி/மட். இளைஞர் ஆணைக்குழு
20, மத்திய வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அரிது அரிது மானிடராவது" என்று கூறினர் ஒளவையார். மானிடராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ் செய்திட வேண்டும்மா என்றார் இன்னேர் கவிஞர். ஆம் எடுத்தற்கரிய பிறப்பு மானிடப்பிறப்பு. மானிடனகப் பிறந்தால் மட்டும் போதுமா? அப்பிறவியின் பெருமைக்கேற்ப வாழவேண்டாமா? மற்றவர்களையும் வாழவைக்க வேண்டாமா? மனிதன் ஒன்றுதான் தாயின் முன்பும் வெறுப்புத் தருவதாகும். பெற்ற தாய்க்கே இவ்வாறனல் மற்ற சான்றோர்க்கு எவ்வாறு இருக்கும் சிந்தித்து பாருங்கள்.

"முதலில் மனிதன் மதுவை அருந்துகின்றன். பின் மது மனிதனை அருந்துகிறது. பின் மதுமதுவை அருந்துகிறது" என்று மது

# மதுவும் மனித வாழ்வும்

S. P. பிறிட்ஜட் B. A.
676, அன்பு வழிபுரம், திருகோணமலை.

என்பவன் இம்மண்ணில் பிறக்கும் போது வெள்ளை மனம் கொண்டவனக, மென்மையுள்ளம் படைத்தவனக, நல்ல பண்பு உயர்ந்த நோக்கு கொண்டவனக பிறக்கிறன், குடும்பம் என்ற சிறுவட்டத்துள் தொடங்கிய உறவு நண்பர்கள், அறிமுகமானவர்கள், சமூகம் என விரிவடையும் போது, பாசம், நட்பு, காதல், மது என்பன அவனைத் தொற்றிக் கொள்கின்றன. இந்த மதுவினல், மனித வாழ்வு மணம் கமழ்கின்றதா? மறுமலர்ச்சி காண்கின்றதா? மண்ணுலகை வாழ வைக்கின்றதா? இல்லவே இல்லை. அப்படியாயின் மதுவை ஏன் அருந்துகிறர்கள் ? எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகும் போது மது. கற்பனைகள் கனவுகள், நனவாகாதபோது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாத போது மது. இவ்விதம் சிறிது சிறிதாக மதுவை அருந்த ஆரம்பித்து இறுதியில் மதுப்பழக்கத்திற்கு நிரந்தர அடிமையாகி அல்லல் படுகிறர்கள் நம்மவரில் பலர்.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னுதால், எம் மாற்றுச் சான்றோர் முகத்துக்களி" என்றார் வள்ளுவர். ஆம் மகனுடைய எந்த குற்றமும் தாய்க்கு வெறுப்புத்தராது ஆனல் மதுஅருந்தும் அருந்தத் தொடங்குவதால் வரும் கேட்டை விளக்குகிறது சீனப் பழமொழி.

மது அருந்துவதால் வரும் கேடு ஒன்ரு? இரண்டா? எண்ணற்றவை. ஆம் இம்மதுவினல் உடல், உளநிலை கெடுவதுடன் சுய கட்டுப்பாட்டையிழந்து மதிப்பு மரியாதை அற்றவர்களாகின்றர்கள். தன் சொந்தக் கடமைகளையும், குடும்பப் பொறுப்புகளையும், உரிமைகளையும் கவனியாது விடுகிறர்கள். வறுமையும் வெறுமையும் பிடித்தவர்களாக துன்பத்திலும் துயரத்திலும் துவள்கிறர்கள். சமூகத்தில் சக்தியற்றவர்களாகி **"குடிகாரன்"** என்ற அவப்பெயரை தானும் பெற்றுக் கொள்வதுடன் தனது குடும்ப அங்கத்தவருக்கும் இப்பட்டங்களை சூட்ட வழிவகுக்கிறர்கள். (குடிகாரன் மனைவி, குடிகாரன் மகன்) இவை


> பிறர் உன்னை ஏமாற்றிவிட்டார்களே என்று நீ வருந்துவதைவிட நீ ஏமாறிவிட்டாயே என்பது குறித்து வருத்தப்படு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டுமா! சமூகத்தில் பல குற்றங்களை புரிவதுடன் குழப்பங்களையும் உருவாக்கி ஈற்றில் தாமும் அழிவதுடன் சமுதாயத்தையும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கிருர்கள்.

எனவே மதுப்போதையிலிருந்து நம்மவர் விடுதலை பெற வேண்டும். அத்துடன் மாற்றுனையும் வாழவைக்க வேண்டும். இதற்கு வழிதான். என்ன? மதுவை நாம் ஏன் அருந்துகின்றோம் என்பதை சிந்தித்து சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். இம்மதுப் போதையே தன் குடும்பம், சமூகம் ஏன் உலகத்தையுமே பாதிக்கின்றது என்ற உண்மையை உணர்ந்து, தன் குடிகார நண்பர்களையும், களியாட்டக் குடியையும் தவிர்க்க வேண்டும். நம்மவரில் பலர் நான் இனி குடிக்கமாட்டேன் எனப் பல தீர்மானங்களை எடுக்கிருர்கள். பல சத்தியங்கள் செய்கிருர்கள். ஆனுல் அந்த நேரம் வந்ததும் அவர்களையறியாமலே எழுந்து குடிக்க போய் விடுகிருர்கள். குடிக்கப் போகும் பொழுது. குடிக்கும் பொழுதும் இனிக் குடிக்க மாட்டேன், இனி குடிக்க



மாட்டேன் எனச் சொல்கிருர்கள். ஆனுல் அவர்களால் குடிக்காமலிருக்க முடிவதில்லை. இந்தப்பரிதாப நிலையிலிருந்து விடுதலை பெற வேண்டும். நற்சிந்தனையை வளர்க்கக் கூடிய நூல்களை வாசித்துப்பயனடைய வேண்டும். ஏன் சமயரீதியிலும் இதிலிருந்து விடுதலை பெறலாம். அதாவது எல்லாவற்றிக்கும் மேலான ஒரு சக்தி இருப்பதை உணர்ந்து மதுபோதைக்கு அடிமையானவர்கள் தன் வாழ்வை அம்மேலான சக்தியிடம் அர்ப்பணிக்க முயற்சிக்க வேண்டும். அத்தோடு பிரார்த்தனைகளிலும், தியானங்களிலும் ஈடுபட வேண்டும்.

எனவே ஒவ்வொரு மனிதனும் தனது மனித மகத்துவத்தைப் புரிந்து இகம்தனில் நிறைவு பெறுவதற்கு அகம்தனை மதுவிற்கு அடிமையாக்காது, ஆரோக்கியமான சிந்தனைகளை உள்ளத்தில் ஆழப்புதைத்து, வாழ்தல் அவசியம். வாழ்வின் இனிய அனுபவங்கள், நல்ல நண்பரோடு கொண்ட உறவின் அதிர்வுகள், உயர் இலட்சியத்தை நோக்கிய அசைவுகள், அறக்கோட்பாடுகள் போன்றவற்றினுல், சிந்தனைக்குச் சிறப்பூட்டி சீரான வாழ்க்கை பெற்று நாடு போற்ற வாழ வேண்டும்.

''துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.''

## உண்மை

தமிழ் மொழியில் உண்மை என்பதற்கு மூன்று சொற்கள் காணப்படுகின்றன. அவை, உண்மை, வாய்மை, மெய்மை எனப்படும். உள் + மை = உண்மை; உள்ளத்தின் தன்மை.

வாய் + மெய் = வாய்மை; வாயின் தன்மை; மெய் + மை = மெய்மை; உடம்பின் தன்மை என்ருகும் இதன் கருத்துத் தீமையை மனத்தாலும் எண்ணுதே; தீமையை வாயாலும் சொல்லாதே; தீமையை உடலாலும் செய்யாதே என்பதாகும். இத்தகைய பொருள் நிறைந்த சொற்களைத் தமிழில் அன்றிப் பிற மொழிகளிற் காண இயலாது.

— கி. ஆ. பெ. —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அடுத்த திருத்தந்தை யார்?

அடுத்த திருத்தந்தை ஒரு ஆசிய நாட்டுக்காரராகத்தான் இருப்பார் என்று வத்திக்கான் வட்டாரத்தில் பேசிக்கொள்கிறார்களாம். இத்தாலி முழுவதும் இதுவே பேச்சு. ஆசிய நாட்டுக்காரர் என்றால் கர்தினால் லூர்துசாமி ஆண்டகை அவர்களாகத்தான் இருப்பார் என்பதும் செவிவழிச் செய்தி.

## இறப்பு

அமெரிக்காவின் வடமேற்கு எல்லைப் பகுதியில் விபத்தின் விளைவாக விமானத்தில் பயணம் செய்த கனடா ஆயர் ஓமர் ராபிடஸ் மரணமடைந்தார். இவருடன் பயணம் செய்த ஒரு குருவும், அருட்சகோதரியும் மரணமடைந்துள்ளனர்.

## அழைப்பு

யூக்கோஸ்லேவியா அமைச்சர் ரேய்ப்பிஸ்டாவிக் தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு திருத்தந்தையை அழைத்துள்ளார். அமைச்சர் அண்மையில் ரோமுக்கு வந்தபோது இவ்வழைப்பு விடுக்கப்பட்டது.

## அன்னை தெரேசா

பூனாவில் நடந்த பொதுக்கூட்டத்தில் அன்னை தெரேசா பேசுகையில் மதம் மாறுகிறவர்களை கண்டித்துப் பேசினார். ஒருவனின் மதத்தை மாற்றுவதற்கு ஒருவருக்கும் உரிமை கிடையாது. ஆனால், அவனது நல்வாழ்விற்காக மனதை மாற்றலாம். ஆனால், வற்புறுத்தி மதமாற்றம் செய்வதல்ல என் நோக்கம் என்கிறார்.

## பழைய பிரதிகள் தாரீரோ!

1969ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டுவரை வெளிவந்த தொண்டன் பிரதிகளை பாதுகாத்து வைத்திருக்கும் வாசகர்கள் தயவுசெய்து எம்மோடு தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம். குறிப்பிட்ட காலப் பிரதிகள் கைவசம் இல்லாமையால் அவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோம். பிரதிகள் வைத்திருப்போர் அவற்றை எமக்கு அளிக்க விரும்பினால் வைத்திருக்கும் பிரதிகளின் எண்ணிக்கையை, ஆண்டு, மாதம் முதலியவற்றையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்கின்றோம்.

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆண்களே! பெண்களைப் புரிந்துகொள்ளுங்கள்



**ஆ**ண்கள் ஏகப்பட்ட சாமர்த்தியசாலிகள்...

— அதிகம் பலம்வாய்ந்த யானையை கோயிலில் கட்டி சலாம் போடவைத்து விட்டார்கள்.

— எருமையை வீட்டிலே முடக்கிவிட்டார்கள்.

— சிங்கம், புலியைக்கூட சர்க்கஸுக்கு பயன்படுத்திக்கொண்டார்கள்...

இந்த ரீதியில் பெண்ணை அடுப்படிக்கே ஒதுக்கிவிட்டார்கள்...

வீணே முடக்கி வைத்தால் என்ன நியாயம்? பாத்திரம் கழுவுவது என்ன அவளின் பரம்பரைத் தொழிலா?

ஆண்கள் அடுப்படியில் என்றுவது உதவுகிறேன் என்று நெருங்கிப் போகிறார்களா? அப்படி உதவுவது என்ன கேவலமா?

## செல்வி T. தங்கேஸ்வரி

புரிந்து கொள்வதும், ஒத்துழைப்பதும் தானே இல்லறத்திற்கு சிறப்பு. சமுதாயம் புதிய எழுச்சியோடு நிமிரத் தலைப்படவேண்டாமா?

பாவம் பெண்கள் தம் நிராசைகளை நகை, ஆடம்பரங்களின்மேல் அடம்பிடிக்கிறார்கள்... அதிலாவது தம் ஆசை பூர்த்தியடையாதா?

> எறும்புக்கும் கரும்புக்கும் இடையே உள்ள உறவு உனக்கும் இறைவனுக்குமிடையே இருக்கவேண்டும்.

அடையணும்... அடைவதற்காக பலபல நேரங்களில் அழவும் செய்கிறார்கள்... அதுதான் அவளின் கடைசிப் பலம்... அண்ணு ஒரு கதையில் சொல்லியிருக்கிறார், வயதானவனுக்கு வாழ்க்கைப்பட்ட இரண்டாந்தார இளமனைவி சரியச்சரிய பட்டுப்புடவை கட்டிக்கொண்டு, வெளியில் சந்தோசமாய் இருப்பதாய் காட்டிக்கொள்கிறாள் என்று.

இதுதான் பெண்கள் நிலைமை! பெண்கள் இப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று கட்டுப்படுத்தி ஒழுக்கம் என்று பெயர் சூட்டி அழகு பார்க்கிறார்கள். அவர்களுக்கு கிடைத்த லேட்டஸ்ட் கிரெடிட் வேலைக்குச் சிலர் போவதுதான் — அதுவும் **வரதட்சணைக்குப்** பயன்பட்டுப்போனது. அவர்களே தேசத்தின் பிரச்சினை மாதிரி ஆக்கப்பட்டார்கள். ஆமாம், அவர்களுக்கு திருமணமே ஒரு பிரச்சினை.

பெண்களின் உணர்வுகளையும், அபிலாஷைகளையும் புரிந்துகொள்ளவேண்டும். ஆண்களின் பொறுப்பான கடமைகளில் இது தலையாயது — பெண்ணுரிமை — பெண்கள் கோஷம் போடுவதிலும், எதிர்ப்பதிலும் கிடைத்துவிடும் என்று யாரும் நம்பவில்லை. அது ஆண்களின் புரிந்துகொள்ளுதலிலும், ஒத்துழைப்பதிலுமே இருக்கிறது. மனித நேயம் கொண்டவர்கள் இதற்கு உதவுவார்கள் என்று நம்பலாம் அல்லவா? இனிமேலும் ஆண்கள் உணர்ந்து நடக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இதயத்தை உறைய வைக்கும் நிகழ்ச்சிகள் அண்மைக் காலங்களில் இந்த த(ம்)ர்மிஸ்ட ஜனநாயக நாட்டில் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. வெளிநாட்டு சமூகத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் 'இலங்கையில்' இது வரை இடம் பெற்ற சம்பவங்களுள் மிகவும் கொடூரமானது! என்று வர்ணித்துள்ள "படுவான் கரைப் படுகொலைகள்' இன அழிப்பின் இரத்தப்பசியின் வெளிப்பாடுகளாகும். சந்தையிலே மந்தைகளைக் கொல்வது போன்று துப்பாக்கி ஏந்திய கசாப்புக் கடைக்காரர்கள் குடும்பம் குடும்பமாக, பெற்றோரை, பிள்ளைகளை, முதியவரை, குழந்தைகளை, இளைஞரை, தொழிலாளரை இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களை கொன்று குவித்துள்ளார்கள். புத்தம் போதிக்கும் நாட்டில் மனித இரத்தம் ஆறாக ஓடுகிறது.

தீவிரவாதிகளின் கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெற்ற இப்படுகொலைகளை அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் திரித்து, மறைத்து அப்பட்டமாகப் பொய் கூறினாலும் அது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்ற முட்டாள் தனமாகவே முடிந்துள்ளது. பழகிப்போன பொய்களை யார் நம்புவார்கள்?

வட பகுதியில் எரிபொருள் தடையின் மூலம் பொருளாதாரத்தைச் சிதைத்து, அன்றாட அலுவல்களைச் சீர்குலைத்து, வறுமையை பட்டினியை, உருவாக்க முயற்சி நடக்கிறது அத்துடன், படைகளைக் குவித்து முகாம்களை போட்டு போராயத்தமும் நடக்கிறது. இந் நடவடிக்கைகள் இதுவரை கூறிவந்த பேச்சுவார்த்தை - அரசியல் தீர்வு என்னும் பசப்புத்தனங்களை அம்பலமாக்கி வருவதோடு தமிழரின் உரிமைப் போராட்ட உணர்வுகளை அரச பயங்கரவாதத்தின் மூலம் வெளிப்படையாகவே அடக்கத்துணிந்து விட்டதையே காட்டுகிறது.

சொந்த மக்களையே அடக்கி, ஒடுக்கி அழிக்க முனையும் அரசிடம் நாம் என்ன பெரிய நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? பெருகிவரும் சாவுகளும், சித்திரவதைகளும், அழிவுகளும் மக்களிடையே பெரும் அச்சத்தையும், அவலத்தையும் தோற்றுவித்துள்ளன. இனி நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ற கேள்விக்கு சரியான விடை எங்கிருந்தும் தெளிவாக வரவில்லை.

ஆனால், கடந்த காலம் சில உண்மைகளை எமக்கு உறுதிப்படுத்தியுள்ளது. உண்மையான சமதான வேட்கை இல்லாமல் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளும், காண முயலும் அரசியல் தீர்வுகளும் பயன்தரப் போவதில்லை. பேச்சுவார்த்தை எதிரியை வீழ்த்த முயலும் ஒரு பொறியாகவே பயன்பட்டுள்ளது. ஆயுதத்தை வாங்கவும், படையைப் பெருக்கவும், பயிற்சிகளை வழங்கவும் ஓர் அச்சாரமாகவே பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்னும் பதங்கள் சர்வதேசமட்டத்திலும் கையாளப்படுகின்றன.

> துன்பம் என்பது உன் தலைமீது தொங்குகிற வாள்! சதாரணமாக அதை நீயாக அறுத்து விட்டாலொழிய உன் மீது அதுவிழுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்நிலையில் தமிழினம் தனது நிலையை வழியை உறுதியாகத் தீர்மானிக்க வேண்டும். அயல் வீட்டுக்காரனையோ, தொலைவில் இருப்பவனையோ நம்பியல்ல, நமது இலட்சியத்தை நாமே கையாளும் முறையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அதுவும், விரைவாக, தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

எதையுமே செய்யாது வெறுமனே சாத்வீகம், சமாதானம், நீதி என்ற ஒப்பாரிகளை வைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுதான்.

இன்று தமிழர்கள் இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கில் வெளியேறுகிறார்கள். குடும்பத்தோடு வெளிநாடுகளில் குடியேறுகிறார்கள். பெற்றோர்கள் தம்பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்க பணத்தைக் கொட்டிக் கப்பலேற்றுகிறார்கள். தமிழின விடுதலையும், போராட்டமும் ஏதோ சில குழுக்களுக்கு மட்டும் தான் சொந்தம் என்பது போல் மக்கள் அந்நியப்பட்டு நிற்பதும் ஒதுங்கிக் கொள்வதும் விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலவீனமாகும். யாராவது அடிபடட்டும், சாகட்டும், நாம் தப்பிவிடுவோம், நமது குடும்பம் சொகுசாக இருக்கட்டும் என்று வாழும் சுயநலமிகளுக்கு ஏன் விடுதலை? தமது இனத்தின் இன்பதுன்பங்களில் பங்குகொள்ள மறுக்கும் மக்களைக் கொண்ட ஓர் இனம் எவ்வாறு விடுதலை பெற முடியும்?

முதலில் எமக்குத் தேவை ஒற்றுமை, அசையாத நம்பிக்கை, துன்பங்களையும் தாங்கிக்கொள்ளும் உறுதி, இலட்சியத்துக்காக எதையும் இழக்கும் தியாகம், அனைத்தையும் பகிர்ந்து கொள்ளும் தாராளம். நாம் தெரிந்து கொண்ட வழியில் அஞ்சாது செல்லும் வீரம். இவை இல்லாது நாம் தேடும் இலட்சியத்தை தட்டில் வைத்து யாரும் தந்துவிட மாட்டார்கள்.

அன்றாடம் கேட்கும் அழுகுரல்களும் கண்ணீர்க் கதைகளும், அவலச்சாவுகளும், நெஞ்சை அறுக்கின்றன. இது தொடரக் கூடாது. தொடரவே கூடாது. இதிலிருந்து நாம் மீளவேண்டும். நம்மை நாம்தான் மீட்க வேண்டும்.

★

## உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ்



''தொண்டன்'' சித்திரைத் திங்கள் இதழ் உயிர்ப்பு விழாச் சிறப்பிதழாக மலரும். இதழை சிறப்பிக்க உங்கள் ஆக்கங்களை இம்மாதம் (மாசி) 28ம் திகதிக்குமுன் அனுப்பி வையுங்கள்.

—(ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பூஜைக்குரிய மலர்

மூன்றாண்டுகள் முழுசாக முடிந்து விட்ட முதிய நிகழ்ச்சி என்றாலும் அதை இன்று நினைத்தாலும் கூட அவனது எண்ணத்திலும் உணர்விலும் ஒரு சலனம். ''மனிதன் பெலவீனன் எப்போது? தன்னைத்தானே ஆள முடியாத போது'' இந்த வார்த்தைகளை அவளிடம் ஆயிரம் முறை சொல்லி தன்னை ஒரு பெரிய மனிதன் போல், காட்டிக்கொண்டானே தவிர அவளுடன் பேசும் போதும், பழகும் போதும், அவள் அவனைப் பார்த்து கன்னம் சிவக்க 'களுக்' கென்று சிரிக்கும் போதும் அவனையே மீறிய ஒரு ஏக்கம் தவிப்பு. தன்னை அவள் எப்படி நினைத்தாளோ அப்படியே தானும் நடிக்க வேண்டும் என்ற போலி எண்ணம், அவன் வாழ்வுப் பாதையில் இப்படியொரு புயலை ஏற்படுத்தி புழுதி படிய வைக்குமென்று கனவிலும் நினைக்கவில்லை.

ஒரு காலத்தில் அந்தக் கிரேவல் ஒழுங்கையில் இரு மருங்கிலும் லவாந்தர் மரங்கள் பூத்துச் சொரிந்தனவாம். அதனால் தான் இன்னும் அந்த ஒழுங்கை ''லவாந்தர் ஒழுங்கை'' என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்று மருந்திற்குக் கூட ஒரு லவாந்தர் மரத்தை அந்த ஒழுங்கையில் காண முடியாது. அந்த சன நடமாட்டமில்லாத ஒழுங்கையில் தான் அவள் குடியிருந்தாள். அழகில் எவருமே குறை சொல்ல முடியாத ஒருவனைத் தனது வாழ்க்கைத் துணைவனாக வரித்துக் கொண்டு, அமைதியான வாழ்க்கை நடத்துகிறாள். இரண்டு குழந்தைகளுக்குத் தாய். இன்று ஒரு குடும்பத்தலைவி. உள்ளூரில் அவளை நினைத்து ஏங்கிய எத்தனையோ வாலிப உள்ளங்கள் அவள் திருமணம் செய்த பின்பு தங்கள் எண்ணங்களை ஒரு கதையாய், கனவாய் நினைத்து மறந்து விட்டு தங்கள் தங்கள் வாழ்வைத் தேர்ந்தெடுத்து விட்டனர். அவர்களுக்கேற்பட்ட தோல்வியை இட்டு நிரப்புவதற்காக அத்தனை பேரும் திருமணம் செய்து விட்டார்கள். அவளை விட அழகான பெண்களைக் கூட சிலர் கரம்பிடித்து அவள் வீட்டு வாசலால் வேண்டுமென்றே சற்று பலமாகப் பேசிச் சிரித்த வண்ணம் சென்றனர். தங்கள் உள்ளப் புகைச்சலை அதன் மூலம் தணித்துக் கொள்வதற்காக. அவர்களுக்கொரு திருப்தி ஒரு நிறைவு.

அரவிந்தன் மட்டும் இன்னும் திருமணம் செய்யவில்லை. அவனும் அந்தக் கோஷ்டியில் ஒருவன் தான். அவள் விஷயத்தில் அவன் இன்னும் தோல்வி கண்டு விட்டதாக நினைக்கவில்லை. அவளுக்காக உயர்ந்த கருத்துக்களை உதட்டளவில் மட்டும் உலவ விட்டவன் இன்று உள்ளத்திலும் பதித்துக் கொண்டு உயர்ந்து விட்டான். அவளிடம் பேசும் போது எதைச் சொல்லி நடித்தானோ அதையே தனது வாழ்விலும் பிணைத்து அந்தக் கருத்துக் கருவூலங்களுடன் இரண்டறக் கலந்து விட்டான். வெறும் உடல் வேட்கைகள் மட்டும் உயர்ந்த வாழ்க்கையாகிவிடாது. என்பது அவனுடைய இன்றைய சித்தாந்தம். பொட்டுப் பொட்டென்று தூறிக் கொண்டிருந்த மழையைக் கூட பொருட்படுத்தாமல் அரவிந்தன் தன் பாட்டிற்கு நடந்து கொண்டிருந்தான். அவனது மனம் எதையோ நினைத்துக் கொண்டது. மார்பகம் இருமுறை விம்மித் தணிந்தது. வெறும் கூட்டிலிருந்து இரு பெருமூச்சுக்கள் வெளியேறிக் காற்றுடன் கலந்தன. முகத்தில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்த மழைத்துளிகள் அவனது கண்களில் இருந்து வழிந்து கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டிருந்த கண்ணீர்த் துளிக ளுக்கு திரைபோட்டு மறைத் தன. நேராக வீட்டை நோக்கி நடந்தவன் தன் பெட்டியைத் திறந்து அந்தப் புகைப்படத் தை எடுத்து பின்புறத்தை ஆவலுடன் நோக்கினன்.

அதில் முத்து முத்தான எழுத்துக்களில் "என் சிந்திக் கும் உள்ளத்தில் இருந்து உங் கள் தித்திக்கும் தேன்மொழி கள் என்றுமே மறையாது" என்ற வாக்கியங்கள் பதிந்தி ருந்தன. மூன்றாண்டுகளுக்கு முன் அவள் அவனை இறுதி யாகச் சந்தித்தபோது ஏதோ ஞாபகத்திற்காக கொடுத்தபுகைப்படத்தில் தன் கைப்பட எழுதிய வாக்கியங் கள் தான் அவைகள். எத் தனையோ மனோதத்துவ நூல் களையும், உள ஆராட்சி ஏடு களையும் துருவித்துருவிப் புரட் டிப் பார்த்து விட்டான். அந்த வாக்கியங்களுக்கு மட் டும் அவனால் எந்த வித அர்த் தமும் கற்பிக்க முடியவில்லை. அவன்மட்டில் அது ஒரு புரி யாத புதிராகவே பட்டது. சிந்தனைக் கோடுகள் கீறலிட் டன. நான் போலியாகச் சொன்ன அடுக்குத் தொடர் களைத்தான் அவள் தேன் மொழிகள் என்று குறிப்பிட் டாளா? அப்படியென்றால் எத்தனை தூரம் ஏமாந்து விட் டாள் இல்லை அவள் ஏமாந் திருந்தால் என்னையல்லவா மணந்திருப்பாள் இன்று அரு ளானந்தத்தை திருமணம் செய்து கொண்டு அமைதியு டன் தானே வாழ்கிறாள். குடும்பமென்ற பொறுப்பு டன் தானே வாழ்கிறாள். நான் அவளை வர்ணித்துக் கூறிய வார்த்தைகளை மட்டும் தான் நேசித்தாளா? எனது போதையூட்டும் சொற்களில் மயங்கினளா? அல்லது என் னைப் போல் அவளும் வேத னைத் தீயால் கருகிக் கொண் டிருப்பாளா? எண்ணக்கால் கள் பின்நோக்கி வேகமாக ஓடத் தொடங்கின.

எல்லோராச் சிற்பங் களை எதிர்பாராமல் கண்டு விட்ட பிரமன் தனது திற மைக்குச் சவால் விட்டு பழ மையின் சின்னங்களாக நிற் கும் அந்தக் கற்சிலைகளுக்குப் போட்டியாகத்தான் இந்தப் பேசும் பொற்சிலையைப்

**நீற்று அரியநாயகம்,**
கோவிலடி வீதி,
பாலையூற்று,
திருகோணமலை.

படைத்திருந்தான் போலும் அமலத்தை. பேரழகிகள் எப் போதும் செருக்குடையவர்க ளாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதிக்கு மாறுபட்ட வள். அவளது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கனிவு, பணிவு, பாசம், நிரம்பி வழிந்தது. அல்லியைப் போல் மென்மையான அவள் கல்லி னும் வலிய கடின பிடிவாத காரி. மௌனத்தால் ஆயிரம் அர்த்தங்கள் கற்பிக்கும் சக்தி வாய்ந்தவள்.

கண்ணுக்கினிய ஒரு பெண்ணிடம் ஓர் ஆண் எதை எதிர்பார்ப்பானே அதைத் தான் அரவிந்தனும் அமலத் திடம் எதிர்பார்த்தான். என்று சொல்வதை விட அவ ளது பண்பையும் குணத்தை யுமே அதிகமாக நேசித்தான் என்றே கூறலாம். கன்னியா வென்னீரூற்றிலே ஊற்றெ டுத்த அவர்களது தொடர்பு வெறும் பாலுணர்ச்சியால் கட் டுப்பட்டிருக்கவில்லை. ஏதோ ஒரு பாச உணர்ச்சியால் பிணைக்கப்பட்டிருந்தது. இனக் கவர்ச்சியால் கட்டுப்படாத அவர்கள் மனக்கவர்ச்சியால் கட்டுபட்டனர். காலம் பறந் தது அவர்களது தொடர்பும் வளர்ந்து மலர்ந்தது.

மாதா கோவில் உள் பிரகாரம் வெறிச்சோடிக்கிடந் தது. மணிகள் பிரக்ஞையற் றுக் கிடந்தன. பகல் பன்னி ரெண்டு மணி. கோயில் நடுக் கூடத்திலிருந்து எழுந்த விம் மல் ஒலி மட்டும் அந்த இடத் தில் சூழ்ந்திருந்த அமைதி யைக் கலைத்துக் கொண்டிருந் தது. மகான் யேசுவின் பாதா ரவிந்தங்களில் தன் மலர் முகத்தைப் பதித்தவாறு அம லம் அழுது கொண்டிருந்தாள்.

உன்மீது யாராவது குறை கூறினல் அதை ஏற்றுக்கொள். குறையை ஏற்றுக்கொள்வதே நீ உன் குறைவை நிறைவு செய்யும் முயற்சியின் முதற் படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தன் உள்ளக் குமுறல்களை விழி நீராக்கி வெளியிட்டுக் கொண்டிருந்த அவளை ''அமலம்!'' என்ற மெல்லிய குரல் உலுப்பித் திருப்பியது. அரவிந்தன் அங்கே நின்று கொண்டிருந்தான். ''அரவிந்தன் நீங்களா?'' பொங்கி வந்த அழுகையை ஒருவாறு அடக்கிக் கொண்டு கேட்டாள். ''அமலம்! இது பரிசுத்த பீடம் இங்கிருந்து பேசுவது முறையல்ல வா வெளியில் போய் விடலாம்'' அரவிந்தன் வெளியேற முயன்றான். ''இல்லை அரவிந்! எங்கள் அன்பு கூடத் தூய்மையானது தான் இந்த இடத்தின் புனிதத் தன்மையை அது எந்தவிதத்திலும் குறைக்க முடியாது'' அழுத்தமாகப் பேசினாள். உண்மை தான் அமலம் உனக்கும் எனக்கும் மட்டும் அது தெரிந்தால் போதாது, இந்தச் சமூகத்திற்கு அது புரியும்படி செய்ய வேண்டும். சமூகம் ஒரு விசித்திரமான மிருகம் அதன் கண்ணுக்கும், வாயும், காதும், இருக்க வேண்டிய இடத்தில் எப்போதும் இருப்பதில்லை. அவை காலத்திற்குக் காலம் மாறி பயங்கரமாகக் காட்சி தரும். சாந்தமே உருவாக நின்று கொண்டிருந்த யேசுநாதரின் பளிங்கு உருவத்தை நான்கு விழிகள் ஒரே முறையில் மெய்த்துத் திரும்பின. இதன் பின் இருவரும் கோயிலை விட்டு வெளியேறினர்.

தாங்கிப்புட்டிக்கும் மைனா வெளிக்கும் இடையிலுள்ள கடற்கரையில் நடுநிலையமாக நிற்கும் அந்த ஒற்றைப் பனைக்கென்று ஒரு சரித்திரமே கிடையாது. தனியாக நிற்கும் அதன் கீற்றுகளில் இளந்தென்றல் உராய்ந்து செல்லும் போது எழும் ஓசை தனக்கென்று துணையில்லாமல் வாழ்ந்துவிட்ட தனிமையில் ஏக்கத்தால் விடும் பெருமூச்சைப் போலவே கேட்கும். ஆளரவமில்லாத அந்தப் பனை மரத்தடியை தங்கள் இருக்கையாக்கிக் கொண்டனர் அரவிந்தனும் அமலமும். தீப்பிழம்பாக மாறி இருந்த தன் இதயத்தை வாயாக்கிப் பேசினான் அரவிந்தன் ''அமலம் இதுவரை நான் பேசியதைக் கேட்டு நீ சலித்திருப்பாய் இன்று நீ ஏதாவது பேசு நான் கேட்கிறேன் என்று ஆவலுடன் கேட்டான். ''உங்கள் முன்னால் நான் பேசுவதா? நீங்களோ மேதை. நானோ பேதை. குயிலுக்கு முன்னால் கோட்டான் குரல் கொடுக்க முடியுமா? வம்பு பேசி என்னை வாட்டி வதைக்காதீர்கள்'' இப்படிக் கூறிவிட்டு தன் நீள் விழிகளை நிலத்தில் பதிய விட்டாள். ''சரி அமலம் நீ என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாவிட்டால் நான் உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா? என்றதும் குனிந்த தலை நிமிராமல் கேளுங்கள் என்று தனக்குள்ளே புன்முறுவல் பூத்தாள் அமலம். அரவிந்தன் கேட்டான்'' அமலம் உனது இதயத்தில் எப்படிப்பட்ட இடத்தை எனக்காக ஒதுக்கி வைத்திருக்கிறாய்? அதை இப்போதே சொல்லிவிடு துரித நடையில் பேசினான் அரவிந்தன், அமலம் திகைத்தாள், திணறினாள் இப்படியொரு கேள்வியை அவன் கேட்பான் என அவள் எதிர்பார்க்கவில்லை. தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு ''அரவிந் உங்களை நாளை சந்திக்கும் போது கூறுகிறேன்'' அவனது பதிலை எதிர் பாராது எழுந்து விட்டாள். இருவர் சிந்தையிலும் ஆயிரம் எண்ணங்கள் சிரித்தவாறே பிரிந்தனர். பகலவனும் இரவுக் கன்னிக்கு விடைபகர்ந்து கொண்டிருந்தான்.

## சிறுகதை

அன்று சனிக்கிழமை சோர்வும் களைப்பும் மேவிட்ட அமலத்திற்கு அரவிந்தன் கேள்வி அரிவாள் உருவிற் பெரிதாகி அவளுடைய இதயத்தை அறுத்தெடுத்தது. ''இன்னும் அரவிந்தன் என்னைப் புரிந்து கொள்ளவில்லையா''?

உன்னைக் கடவுள் மன்னிக்கும் அளவுக்கு நீயும் பிறரை மன்னித்தால் கடவுளின் அரசை விரைவில் நிறுவி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவருக்கும் எனக்கும் இடையிலே கருவாகி இன்று காட்டுத் தீ போல் பரவி விட்ட அன்புக்கு என்ன அர்த்தம் செய்து கொண்டு என்னிடம் இப்படிக் கேட்டார்!! கேள்வி மின்னல்கள் ஒன்றன் பின் ஒன்றாக தோன்றி மறைந்தன. சுவர்க்கடிகாரம் பல முறை அடித்தோய்ந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள் கோயில் பூசைக்குப் போவதாகச் சொல்லி விட்டு, அரவிந்தனைக் காணப் புறப்பட்டாள். "வா அமலம்! உனக்காகத்தான் காத்திருக்கிறேன் அமலம் சிரித்தாள் அந்தச் சிரிப்பில் உயிரில்லை. "நான் கேட்ட கேள்விக்கு பதில் கண்டு பிடித்து விட்டாயா" நேற்றைய பிரச்சனைக்கு நேரடி நடவடிக்கை யெடுப்பது போன்றிருந்தது அவனது கேள்வி.

அமலம் பேசினாள் "நீங்கள் என்னை இன்னும் புரிந்து கொள்ளவில்லையா? இதை நினைக்கும் போது என்மனம் வருந்துகிறது. உங்களைப் போல் ஆணித்தரமாக என்னால் பேச முடியாது சுருக்கமாகக் கூறுகின்றேன். "நான் உங்களுக்காகப் பிறந்தவள், உங்களுக்காக வாழ்பவள், உங்களையே நினைப்பவள் போதுமா?" இப்படிக் கூறிவிட்டு தனது நீள் விழிகளை நீண்ட மணற்பரப்பில் மேயவிட்டாள். முக்கனிகளின் சாறும் தேனுடன் கலந்து அரவிந்தனின் காதுகளில் பாய்ந்து பரவியது. "அமலம்" இதயத்தின் உணர்ச்சிகளையெல்லாம் ஓசையாகத் திரட்டிக் கூவினான் அரவிந்தன். அவன் கண்களில் கங்கை பெருக்கெடுத்தது "இல்லை அமலம்! இல்லை நீ பூஜைக்குரிய மலர். என் வாழ்வில் வரமுடியாத வசந்தம். நான் பெற முடியாத சொந்தம்" தன்னை ஒரு மேதையாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தத்துவம் ஒன்றை புரட்டினான்... அவன். அவளது கண்களில் ஊற்றெடுத்த நீரைத் துடைத்தவாறே சொன்னான் நீ எனக்காகப் பிறக்கவில்லை என்னில் பிறந்தவள் என்னுடன் இரண்டறக் கலந்தவள் ஆகவே என்னுடன் வாழ முடியாதவள். புதிரென்று நினைப்பாய். பொன்னான தத்துவம் தானிது.

நடுக்கடலில் தான் நன்முத்து விளைகிறது. அதற்காக கடலே முத்துக்கு சொந்தம் பாராட்ட முடியுமா? அரிவையரின் மார்பில் ஆரமாகப் புரளும் போதுதான் முத்துக்கு மதிப்பேற்படுகிறது. சந்தனம் மலையில் தான் கிடைகிறது. அதனால் மலைக்கு அதன் மணத்தை அனுபவிக்க முடியுமா? வீணையில் இருந்து பிறக்கும் நாதத்தை வீணையே கேட்பதில்லை. அதுபோல் நான் கடலென்றால் நீ என்னில் பிறந்த முத்து, நான் வெறும் மலையென்றால் நீ என்னில் சந்தனம். நான் வீணையென்றால் நீ என்னில் பிறந்த நாதம். அன்னியர்களைத்தான் நீ அலங்கரிக்க வேண்டும்"... ஏதோ பெரிய தத்துவம் ஒன்றைச் சொன்ன பெருமிதத்தில் தலை நிமிர்ந்தான் அரவிந்தன். அமலம் வெகுதூரத்துக்கப்பால் போய்க் கொண்டிருந்தாள். வெண் மணற்பரப்பில் பதிந்திருந்த அவளது அடிச்சுவடுகள் அங்கு வீசிய பலமான காற்றால் அழிந்து கொண்டிருந்தன. அரவிந்தனின் தொடர்புகளை அறுத்துக் கொண்டு யாருடைய வாழ்விலோ ஒளி வீசுவதற்காகப் போய்க் கொண்டிருந்தாள்.

ஏக்கத்துடன் எழுந்த அரவிந்தன் மடியில் இருந்து நழுவி விழுந்தது அந்தப் புகைப்படம்.

அறிஞர் அரவிந்தன் அவர்களே! ஏன் அச்சடித்த சிலையாக மாறிவிட்டீர்கள். ஏது புகைப்படம்? என்று கேட்டுக் கொண்டு வந்த சுந்தரம் "ஓகோ இந்தப் புகைப்படப்பித்தம் மீண்டும் தலைக்கேறி விட்டதா? அவள் தான் என்றோ உன்னை ஏமாற்றி விட்டாளே! இந்தப் பெண்களே இப்படித்தானப்பா... சலனபுத்தி உள்ளவர்கள். அதிலும் இந்தக் காலத்து பெண்களுக்கு காதல் ஒரு "பாஷன்"ம் .. விட்டுத் தள்ளு" அசட்டுச் சிரிப்புடன் கூறினான் சுந்தரம் "இல்லை சுந்தர்! இல்லை...... அப்படிச் சொல்லாதே. என் அமலம் இந்தக் காலத்து பெண் அல்ல... சங்ககால இலக்கியங்களில் வள்ளுவனும் இளங்கோவும் வடித்துக் காட்டிய கற்புக்கரசி.

என் இதயத்தில் வாழும் தெய்வப்பிறவி. எண்ணச் சுரங்கத்திலிருந்து கிடைத்த இலட்சியப்புதையல் இந்த வெறும் கூட்டிற்காக தன் வாழ்வைத் தியாகம் செய்ய வந்த தரம் குன்றாத்தங்கம். அவள் என்னை ஒரு போதும் ஏமாற்றவில்லை. எனது ஏட்டுத்தத்துவங்கள் என்னை ஏமாற்றி விட்டன. சுருங்கச் சொன்னால் என்னையே நான் ஏமாற்றி விட்டேனடா சுந்தர்"

அவனது கண்ணீர் அந்தப் புகைப்படத்தை குளிப்பாட்டியது. மீண்டும் அரவிந்தனின் அடிப்பெட்டிக்குள் அந்தப் புகைப்படம் புகலிடம் தேடியது. —முற்றும்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் மகாநாடு பற்றிய அனுபவங்கள் (தொடர்)

# (14th Congress of UCIP)

கலையுலகன் எஸ். லோகநாதன்

1986 ஐப்பசித் திங்கள் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விக்ஹான் பவான் (Vigyan Bhawan) காங்கிரஸ் நிலையம் அமைந்திருக்கும் நெடுஞ்சாலை எவ்வித ஆடம்பரங்களுமின்றி அமைதியாக - ஆனால் வழக்கமான போக்குவரத்துக்களைக் கொண்டிருந்தது. இவ்விடத்தில் விக்ஹான் பவான் பற்றிச் சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

## விக்ஹான் பவான் (Vigyan Bhawan)

புதுடெல்கியில் மௌலானா அசாட் நெடுஞ்சாலையில் இம் மகாநாட்டு நிலையம் அமைந்துள்ளது. இது இந்தியாவின் முதன்மையான மகாநாட்டு மண்டபம் (India's premier Conference hall) என்பது குறிப்பிடத்தக்கது.

இது மூன்று மகாநாட்டு மண்டபங்களை அடக்கிய இரு மாடிகளைக்கொண்டது. 1வது மாடியில் ஒரு பிரதான மகாநாட்டு மண்டபமும், பிரமாண்டமான ஒரு திரையரங்கும் உண்டு. 2வது மாடியில் இரண்டு மகாநாட்டு மண்டபங்களும் ஒரு பிரமாண்டமான திரையரங்கும் உண்டு. மகாநாட்டு மண்டபங்கள் ஒவ்வொன்றும் 450 பேர் அமர்ந்து கருத்துக்களை பரிமாறிக்கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்டிருந்தது.

14வது UCIP யின் மகாநாடு 2வது மாடியில் உள்ள ஒரு மகாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## மொழிப் பரிமாற்ற உரிமைகள்

எமக்குரிய மகாநாட்டு மண்டபம் 7 மொழிகளைப் பரிவர்த்தனை செய்யக்கூடிய பரிவர்த்தனைக் கூடங்களைக் கொண்டிருந்த போதிலும் UCIP யின் 14வது மகாநாட்டில் 4 மொழிகளைப் பேசுவதற்கும் - பரிமாற்றம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆங்கில மொழி, பிரஞ்சு மொழி, ஜேர்மனிய மொழி. ஸ்பானிய மொழி ஆகியவையே பரிவர்த்தனையில் இருந்தது. ஆசியக்கண்ட நாடுகள் ஆங்கிலம் பேசும் குழுக்கள் என அழைக்கப்பட்டன.

## ஏனைய வசதிகள் :

இக்காங்கிரஸ் நிலையம் பல உள்ளக வசதிகளைக் கொண்டிருந்தது. இவை மகாநாட்டு ஒழுங்கு செய்தவர்களால் மேற்கொள்ளப்படும் வசதிகளுடன் — நிரந்தரமான வாய்ப்புக்களையும் உள்ளடக்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

1. தகவல் பிரிவு 2. பதிவுப் பிரிவு 3. விற்பனைப் பிரிவு 4. பொதுத் தொலைபேசிப் பிரிவு 5. பொருட்காட்சிப் பிரிவு 6. பொது ரெலக்ஸ் பிரிவு 7. இந்திய அரசு வங்கிக் கிளை 8. உல்லாசப் பிரிவு 9. பிரயாண ஒழுங்குப் பிரிவு (விமானப் பயணங்கள், உள்ளூர்ப் பயணங்கள்) 10. தபாற் கந்தோர் 11. பொது வைத்தியப் பிரிவு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

★ ★

காலை 9.00 மணியிலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைத்துப் பேரும் மகாநாட்டு வரவேற்பு கூடத்திற்கு வருகை தந்து கொண்டிருந்தார்கள். பிரத்தியேக நிருபர்கள் — புகைப்படக் கலைஞர்கள் வருகை தந்துகொண்டிருந்த அனைத்துப் பேரையும் தங்கள் கமராவுக்குள் ஒடுக்கிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிறர்மீது தீர்ப்பிடுமுன் அதற்குரிய அறிவும் அனுபவமும் நீ பெற்றிருக்கின்றாயா என்று ஒருமுறைக்கு இருமுறை உன்னையே சோதித்துப்பார். தீர்ப்பிடுவது மிகவும் எளிது.

வரவேற்பு மண்டபத்தில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு மகாநாட்டு மண்டபத்திற்குள் அழைக்கப்பட்டனர். மகாநாட்டு மண்டபத்தில் அனைத்துப்பேரும் அமர்ந்ததும் சரியாக 10.00 மணிக்கு இந்தியத் தலைவர் ஜியானி ஜெய்ல்ஸ் சிங் மண்டபத்திற்குள் நுழைந்தார். மகாநாட்டு நிகழ்ச்சித் தொடரை ஆரம்பித்துவைக்க அழைக்கப்பட்டிருந்தார்.

இந்திய தேசிய கீதம் (இந்தியில்) உயர் கல்வி மாணவிகள் ஐவரினால் பாடப்பட்டதும் மகாநாடு ஆரம்பமாகியது.

(இந்திய கத்தோலிக்க பத்திரிகைச் சங்கத் (Indian Catholic Press Association : ICPA) தலைவர் கலாநிதி ஜோண் வள்ளமத்தம் அடிகளாரினால் வரவேற்புரை இடம்பெற்றது. UCIP யின் 50 வருடத்திற்கும் மேற்பட்ட வளர்ச்சிக் காலத்தில் ஆசியாவில் — அதிலும் இந்தியக் துணைக்கண்டத்தில் 14வது மகாநாடு நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியையும் - நன்றியையும் - அனைவரையும் வரவேற்று இந்தியாவின் சார்பிலும் - ஆசியக் கண்ட நாடுகளின் சார்பிலும் இன்முகத்துடன் தெரிவித்துக்கொண்டார், அருட்திரு கலாநிதி ஜோண் வள்ளமத்தம் அடிகளார்.

ஆரம்ப நிகழ்ச்சித் தொடரில் UCIP யின் தலைவர் கலாநிதி கன்ஸ் சஸ்மன் (ஒஸ்ரியா) சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை ஒன்றியத்தின் தோற்றம் — வளர்ச்சி அதன் ஈடுபாடு பற்றி அறிமுக உரை வழங்கினார்.

அதிமேற்றிராணியார் ஜோண் பி. பொலி (President Pontifical Commssions-VATICAN) அவர்களினாலும், இந்தியக் கத்தோலிக்க ஆயர் அவைத்தலைவர் அதிமேற்றிராணியார் சிமோன் பிமென்ரா (President Catholic Bishops Conference of India) அவர்களினாலும், அதிமேற்றிராணியார் அகுஸ்ரினோ கசிவிலான (Apostolic pro - Noncio to India) அவர்களினாலும் ஆரம்ப நிகழ்ச்சித் தொடரின்போது வாழ்த்துச் செய்திகள் வழங்கப்பட்டன.



**மகாநாட்டில் கட்டுரையாளர்**

ஆரம்ப நிகழ்ச்சித் தொடருக்கு வருகை தந்திருந்த இந்தியத் தலைவர் ஜியானி ஜெய்ல்ஸ் சிங் தமது உரையை ஆங்கிலத்தில் வழங்கினார். இந்தியாவில் UCIP யின் 14வது மகாநாடு நடைபெறுவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைவதாயும், அனைத்து வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் இந்திய மக்களின் சார்பில் வரவேற்பதாயும் கூறி தமது உரையை நிறைவு செய்தார். ஆரம்ப நிகழ்ச்சித் தொடரை நிறைவுசெய்ய UCIP யின் பொதுச் செயலாளர் அருட்திரு வுரூனோ கொல்ற்ஸ் நன்றியுரை வழங்கினார். ஆரம்ப நிகழ்ச்சித் தொடர் நிறைவடைய இந்தியத் தலைவர் மண்டபத்தைவிட்டு அகல, ஏனையவர்களும் தேநீருக்காக விரைந்தார்கள்.

(தொடருவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## பிரதேச அபிவிருத்தி அமைச்சின்

# பாராட்டு விழா

இந்த ஆண்டின் ஆரம்பமே எமது நாட்டுத் தமிழ்க் கலைஞர்களுக்கு மகிழ்ச்சியைத் தரவல்லதாக அமைந்துள்ளது. கவனிப்பாரற்றுக்கிடந்த தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்களுக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சு கடந்த திங்களில் பாராட்டு விழாவெடுத்தது. பணமுடிப்புகளும் கொடுத்ததைத்தான் இங்கு குறிப்பிடுகிறோம்.

ஆண்டுக்கு ஒருமுறையேனும் நடைபெற வேண்டியது ஆண்டுகள் பல கடந்த பின்னாயினும் நடந்தது பாராட்டுக்குரியது. ஆனால் 'ஏதோ செய்தோம்' என்றில்லாமல் செய்வன திருந்தச் செய்திருக்கலாம். அரசாங்க ஆதரவோடு, வசதிகளோடு, வாய்ப்புகளோடு நடைபெற்ற இந்தப் பாராட்டு விழா (கண்துடைப்பு விழாவோ என்றும் பலருக்கு ஐயம்) சரியாகத் திட்டமிடப்படவில்லை என்பது பலரது குற்றச்சாட்டு.

பாராட்டுப் பெற்றவர்கள் நூற்றுக்கு மேலாம். கடைசி நேரத்திலும் பலரது பெயர்கள் சேர்க்கப்பட்டதாம். பலர் வெட்கத்தை விட்டு தம்மையும் பாராட்டும்படி கேட்டுக் கொண்டனராம். பாராட்டுக்குரியவர்களுக்கு உரிய முறைப்படி அறிவித்தல்கள் கிடைக்கவில்லையாம் இதனால் சிலர் பாராட்டுப் பெறப் போகவேஇல்லையாம். சிலர் யார்யாரோ மூலமாக அறிந்து முண்டியடித்து ஓடினராம். பத்திரிகையில் பார்த்தபின்தான் சிலருக்குத் தம்மையும் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்ததாம். இவ்வாறு சிறிலங்கா அரசின் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, கலாச்சார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு நடாத்திய (மூச்சு இளைக்கிறது) தமிழ்க் கலைஞர் பாராட்டு விழா நடந்து முடிந்ததாம்.

முன்கூட்டியே சரியாகத் திட்டமிட்டிருந்தால் இத்தகைய குளறுபடிகளைத் தவிர்த்திருக்கலாம். நூற்றுக்கு மேற்பட்டவரை இப்படி ஒரே அடியாக அழைத்து மேடையை நிறைக்க என்ன அவசரம்...? ஆண்டுக்கு இத்தனை பேர் என்று தகுதியானவரை இனங்கண்டு தேர்ந்து பாராட்டினால் விழாவும் ஒழுங்காக, அழகாக நடக்கும், பரிசும் நிறைவாகக் கிடைக்கும். இப்படியில்லாமல் ஊர் முழுவதையும் ஒரே யடியாக அழைத்து, உள்ளதையெல்லாம் உருப்படி இல்லாமல் பிய்த்துக்கொடுத்து கொளா கொளா' விழா நடத்தியிருக்க வேண்டாம்.

இனியாவது பிரதேச அபிவிருத்தி அமைச்சு நீடுதுயில் கொள்ளாது முன்கூட்டியே சிந்தித்து திட்டமிட்டு பாராட்டட்டும் — உற்சாகப்படுத்தட்டும்.



இப்பாராட்டு விழாவுக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மகாவித்துவான் F. X. C. நடராஜா அவர்கள், மாஸ்டர் சிவலிங்கம், அளகேச முதலியார், மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளை, களுவாஞ்சிக்குடி விஸ்வலிங்கம் (வேறு பெயர்கள் தெரியவில்லை) ஆகியோர் பாராட்டுப் பெற்றதாக அறிகிறோம். பாராட்டுப் பெற்ற எம் மண்ணின் மைந்தர்களையும், அனைத்து தமிழ்க் கலைஞர்கள், அறிஞர்களையும் நாமும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**எம். வீ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆட்டின் ஞாபகம்



ஓர் ஊரில் தாடிப் பிரசங்கியார் ஒருவர் இருந்தார். ஒருமுறை பிரசங்கிப்பதற்காக அவர் ஒரு கிராமத்து ஆலயத்துக்குப் போயிருந்தார். உருக்கமான பிரசங்கம் செய்தார். ஒரு பாட்டி பிரசங்கத்தின் முடிவில் கதறிக்கதறி அழ ஆரம்பித்துவிட்டாள்.

பிரசங்கியார் அருகில் வந்தார். அம்மா எனது பிரசங்கம் உங்களைத் தொட்டு இருக்கும் என்று நினைக்கிறேன் என்றார்.

அதற்கு அந்தப் பாட்டி, 'அதெல்லாம் ஒன்றுமில்லை, நீங்கள் தாடியோடுகூட அங்கும் இங்கும் ஓடி பிரசங்கம் பண்ணியபோது எனக்கு காணமல் போன என் ஆட்டின் ஞாபகம் வந்துவிட்டது. அதற்கும் தாடி உண்டு. உங்கள் பிரசங்கம் முழுவதிலும் என் தாடி ஆட்டின் ஞாபகத்தால் அழுதுகொண்டே இருந்தேன் என்றுகூறி இன்னும் பெரிய சத்தமாக அழ ஆரம்பித்துவிட்டாள்.

— யோ. ஞானம் —

இப்படித்தான் இன்று அநேக விசுவாசிகள் இருக்கிறார்கள். ஆலயத்துக்குள் வந்திருந்தாலும் நினைவுகள் அத்தனையும் வீட்டைநோக்கி இருக்கும்.

நீ கர்த்தருடைய வார்த்தையை முழு இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறாயா? கேட்பதை உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கப் பண்ணுகிறாயா? அதை உன் வாழ்க்கையில் செயல்படுத்துகிறாயா? அப்படியானால் நீ நல்ல நிலம் முப்பதும், அறுபதும், நூறுமாக பலன் கொடுப்பாய் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தை கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவார் என்றார், மத்தேயு 13.23



ஓராண்டு நினைவாஞ்சலி

## திரு. வைத்தீஸ் பிரான்சீஸ்

(உபதேசியார்)

மலர்வு: 20-8-1924 உதிர்வு: 12-2-1986

பல்லாண்டு வாழ்க்கையை பரமன் சேவையில்
பணிவுடன் கழித்து அவர்தம் வார்த்தையாம்
'மனிதனே மண்ணாவாய்' என்ற நினைவு நன்நாளில்
மனைவி மக்களை மாளாத் துயரில் ஆழ்த்தி மறைந்த
என் அன்புக் கடலே என்றும் உம் இதயம்
யேசுவின் பாத மலராகி மணம்வீச இறையை
வேண்டுகிறோம்


**உம் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
மருமகள், பேரப்பிள்ளைகள்**
தாளங்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 38

(கலாத்தியருக்கு எழுதிய திருமடல்)



பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**28 - 2 - 87**

முழுப்பெயர்: ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

## இடமிருந்து வலம்

1. ஆபிகாமுக்கு ஆகார் இந்த முறையில் உறவல்ல
4. இறைவெளிப்பாடு அநேகமாக நடைபெறும் இடம்.
7. இவ்வுலகில் பகைமைக்கு ஒருபோதும் முடிவிராது.
8. இவரால் குறிக்கப்படுவது அரேபியாவிலுள்ள சீனாய் மலை.
11. மனிதர் வழியாய் அப்போஸ்தலனாய் ஏற்படுத்தப்படாதவர்.
12. அனைத்துமே இதன் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதாக மறைநூல் கூறுகிறது.
13. பார்வைக்கு இன்றியமையாதது.
14. இவரை சின்னப்பர் நேருக்கு நேராய் எதிர்த்தார்.
15. வருடம்.

## மேலிருந்து கீழ்

1. பிள்ளை பெறாதவள்.
2. பிள்ளை பெறுபவள் தலைகீழாய் நிற்கின்றாள்.
3. உளவறிதல்.
4. சின்னப்பரின் நற்செய்தி இவனின் படைப்பல்ல.
5. கலாத்தியர் வேறுபட்ட இதனை ஏற்க மாட்டார்கள் என்பது உறுதி.
6. உள்ளங்களில் குழப்பம் உண்டாக்குகிறவர்கள் இப்படி ஆகினால் நல்லது.
7. சின்னப்பர் இவருடன் ஜெருசலேம் சென்றார்.
8. சாபத்திற்கு எதிர்மாறானது.
9. சபிக்கப்படுதலினால் விளைவது.
10. உடன்படிக்கைகளின் எண்ணிக்கை.
13. பார்வைக்கு இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 36 முடிவுகள்

## இடமிருந்து வலம்

1. இரவு
2. மலைநா(டு)
4. இல்லை
5. பாறை
6. இம்மானுவேல்
8. டபால் (பாடல்)
9. மது
10. சீரி(யா)
11. மெசியா
12. ஆரும்
13. பிள்ளை

## மேலிருந்து கீழ்

1. இல்லம்
2. மறைநூல்
3. நாசரேத்து
5. பானுவேல்
6. இடையர்
7. மாடப்புறு
9. மரியாள்

## பரிசு பெறுவோர்:

**1ம் பரிசு:**

பெர்ஞண்டோ ஜெஸ்லி ஹமில்ரன்
புதிய வீடமைப்புத் திட்டம்,
சொறிக்கல்முனை, சம்மாந்துறை.

**2ம் பரிசு:**

ஞேஸ் மேரி குரூஸ்
ஞேசகம்,
ஆலய வீதி, மூதூர்.

## பாராட்டுப் பெறுவோர்:

1) மாட்டின் சில்வெஸ்ரர்
163/2, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

2) இராயப்பு மிக்கேல்
தாளங்குடா - 2, காத்தான்குடி.

3) D. வீமா ஞேசலின் குரூஸ்
சகாயபுரம், மூதூர்.

4) ஹெலன் சந்தியோகு
எஸ். ஸ்ரீபன்
இருதயபுரம் (மேற்கு),
மட்டக்களப்பு.

5) எஸ். கமலராஜ்
2/2, முதலாம் குறுக்கு,
முனைத் தெரு, மட்டக்களப்பு.

பங்குபற்றியோர்: 29
சரியான விடையளித்தோர்: 19

✶ இம்முறை மிகக் குறைந்த எண்ணிக்கை உடையோரே பங்குபற்றியுள்ளனர். அதற்கு போட்டியில் ஏற்பட்ட அச்சுப்பிழையும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இனி வரும் காலங்களில் போட்டியில் பிழை ஏற்படாதிருக்க முயல்வோம் என்று கூறி இன்னும் அதிக அளவில் போட்டியில் கலந்து பயன்பெற வேண்மென்று கேட்டுக்கொள்கின்றோம்.

— போட்டி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் பக்கம்

## சிறப்பாக இருந்தது

கிறீஸ்மஸ் சிறப்பிதழில் கலைஞர் சந்திப்பு என்ற பகுதியில் மட்டுநகரின் மறக்கமுடியாக் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களுடன் நடாத்தப்பட்ட பேட்டி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இதுபோன்ற அம்சங்கள் தொண்டனில் தொடர்ந்தும் இடம்பெற வேண்டுகிறேன்.

இ. நந்தகுமார்
அமிர்தகழி, மட்டக்களப்பு.

## புண்ணியவாளன் யாரோ ?

மார்கழித் தொண்டன் குறுக்கெழுத்துப் போட்டியில் குறை உள்ளது. மேலிருந்து கீழாக அடைக்கப்பட வேண்டிய இரண்டு சதுரங்களை குறைத்துவிட்டார்கள். இது யார் புண்ணியவாளன் செய்த பாக்கியமோ யான் அறியேன் ?

D. லீமா ஞேசலின் குரூஸ்
மூதூர்.

எப்படியோ தவறு நேர்ந்துவிட்டது ஒப்புக்கொள்கிறோம். தவிர்க்க முயற்சிக்கிறோம். தவறையும் மீறி பலர் போட்டிக் கூப்பனை திருத்தி நிரப்பி உள்ளனர். பாராட்டுகிறோம்.

(இ.ஆ)

## பல்சுவை விருந்து

மார்கழித் தொண்டன் பல அம்சங்களையும் தாங்கிச் சிறப்புற்று விளங்கியது. 'சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்' கதை கடற்கரையில் அன்றுடம் இடம்பெறும் பிரச்சினைகளையும், போட்டி பூசல்களையும், அதே நேரம் அவர்களது ஒற்றுமையையும் சிறப்புற எடுத்துக்காட்டுகிறது.

அ. அமலன் நிரோஷ்குமார்
தமிழ் வித்தியாலயம்,
அம்பாறை.

## சரியாக அமையவில்லை

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் பேட்டியைப் படித்து மகிழ்ந்தோம். பேட்டி கண்டவருக்குப் பாராட்டுக்கள். மாஸ்டரின் படம் தான் சரியாக அமையவில்லை.

அ. குமுதினி, க. சியாமினி,
பொ. புவனேஸ்வரி, வ. பாமினி,
கிருஷாந்தி.

## பாராட்டுப் பொங்கல்

பொங்கல் மலரில் 'பொங்குமா பொங்கல்' என்னும் கட்டுரை பாராட்டத்தக்க விதத்தில் அமைந்துள்ளது. தமிழர் திருநாள் பற்றியும், இன்றைய நிலையில் தமிழ் மக்கள் மனதில் வைத்திருக்கவேண்டிய கருத்துக்கள் பற்றியும் எமக்குத் தந்தவருக்கு நன்றியும் பாராட்டுக்களும்.

M. கௌசிகன்
மட்டக்களப்பு.

## சிறுகதை சிறப்பு

தை மாதத் தொண்டன் இதழில் வெளிவந்த 'இதுதான் பொங்கல்' என்ற சிறுகதை மிகவும் சிறப்பாக இருந்தது.

K. W. மஞே
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காற்றில் கலந்துவரும்

நாள் : 17-02-87 நேரம் : மாலை 6.45 மணி

சிறுவர் உலகம்

நாள் : 22-02-87 நேரம் : மாலை 7.00 மணி

புதிய உலகம்

★ 'வனிதா பிந்துகிருள்' — நாடகம்

நாள் : 28-02/1, 02-03-87 நேரம் : காலை 5.50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

நாள் : 03-03-87 நேரம் : மாலை 6.45 மணி

சிறுவர் உலகம்

நாள் : 08-03-87 நேரம் : மாலை 7.00 மணி,

புதிய உலகம்

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 09-02-1987ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media